# ஜாமக்காரன்

# JAMAKKARAN


**VOLUME - 2    Reg NO.TNBIL/2016/70171    ISSUE - 3**

**MARCH 2018 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/=    FOREIGN - Rs.600/=**





*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**




கர்த்தருக்குள் அன்பானவர்களே

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாடு, மரணங்களை குறித்து சபை மக்கள் தியானித்துக்கொண்டிருக்கும் இந்த மாதங்களில் நாம் ஆராதிக்கும் தேவனின் வித்தியாசமான வழிநடத்துதலைக்குறித்து உங்களிடம் பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த குறிப்பிட்ட மாதங்கள் 40 நாட்கள் ஒடுக்கநாட்கள் என்று **கத்தோலிக்க சபை** ஆரம்பித்த காலத்திலிருந்து வழமையாக கத்தோலிக்க சபைகளில் கடைபிடித்துவருகிறார்கள். அதை **பிராட்டஸ்ட்ன்ட்** சபையினரும் பின்பற்றி வருகிறார்கள்.

கலாத்தியர் 6:4ல் "**அவனவன் தன் தன் சுயகிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவன்**" என்று எழுதுகிறார்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும்,ஒவ்வொரு நாளும் தன்னைத் தான் தன் சுயகிரியைகளில் நம் கர்த்தரை வேதனைப்படுத்திய காரியங்கள் என் வாழ்க்கையில் உண்டா? சரிப்படுத்த வேண்டிய விஷயங்கள் ஏதேனும் உண்டா? என்று **தற்பரிசோதனை** செய்துகொண்டால் நிலையான ஆவியை பெற்றவனாக ஒவ்வொரு நாளும் வசனத்தின்படி வாழ முயற்சி செய்யமுடியும்.

சபைகள் அனுஷ்டிக்கும் இந்த 40 நாட்களில் பெண்கள் தங்கள் **தலையில் பூ** சூடாததுகொண்டோ, 40 நாட்கள் எந்த மேக்கப்பும் இல்லாமல் **பவுடர்** முகத்துக்கு பூசாததுகொண்டோ, 40 நாட்கள் **இறைச்சி,மீன்** போன்றவைகளை சாப்பிடமாட்டோம் என்று கூறி பெருமை கொள்வதுகொண்டோ தேவன் நம்மேல் பிரியம் கொள்ளமாட்டார். இவைகள் யாவும் **புறம்பான ஒடுக்கங்கள்** ஆகும். யோவேல் தீர்க்கதரிசிமூலம் கர்த்தர்

ஜாமக்காரன் JAMAKKARAN

கூறுவது என்னவென்றால்: **உங்கள் வஸ்திரங்களையல்ல உங்கள் இருதயத்தையே கிழித்துப்போடுங்கள்** என்கிறார். இதுதான் உள்ளான ஒடுக்கம் ஆகும்.

சரிப்படுத்தவேண்டியது நம் இருதயத்தைத்தான். மற்ற 40 நாட்களில் நாம் வழமையாக கைக்கொள்வது வெறும் சடங்குகள் ஆகும். ஆகவே எது தெய்வத்தை பிரியப்படுத்துமோ அதை நிறைவேற்ற முயலுவோம்.

**கர்த்தாவே உம்மை பிரியப்படுத்த என்னை போதித்தருளும்.** சங் 143:10 என்று ஜெபிப்போம்.

■ 10வது,11வது,12வது பரீட்சை எழுதும் பிள்ளைகளுக்காக ஜெபித்தோம். நீங்கள் எழுதிய எல்லா ஜெபக்குறிப்புகளுக்காகவும் ஜெபித்தோம். கர்த்தர் நம் பிள்ளைகளுக்கு அதிக மதிப்பெண்களுடன் வெற்றியை அருளுவாராக. கடிதங்கள் மற்றும் காணிக்கை அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் நன்றி. மேலும் உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் தினமும் ஜெபிக்கிறோம்.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவவோரடும் இருப்பதாக.

**கர்த்தரின் பணியில்**

**டாக்டர்.புஷ்பராஜ்**

**STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)**

| | | |
|---|---|---|
| 1. Title of the news paper | : | **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : | **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication | : | 89,Majeeth Street, Old Suramangalam, Salem - 636 005. |
| 4. Periodicity of its publication | : | Monthly |
| 5. Printer's name | : | M.Velu |
| (whether citizen of India) | : | Indian |
| Address | : | P.M.Press 168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : | **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : | Indian |
| address | | 89,Majeeth Street, Old Suramangalam. Salem - 636 005 |

I, **Dr.M.G.E.PUSHPARAJ** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated:
1.3.2018

**Dr.M.G.E.PUSHPARAJ**
Signature of Publisher & Editor

# வித்தியாசமான வழிநடத்துதல்
# தற்கொலைகள்

இந்த உலகத்தில் பல விதங்களில் தோல்விகளையும், வியாதிகளையும், நஷ்டங்களையும்,கைவிடப்பட்ட நிலைகளையும் அனுபவிக்கும்போது குறிப்பாக நம்மால் தாங்க இயலாமல் சகிக்க இயலாமல், கடன் சுமை தாங்காமல், தோல்வி அல்லது விரக்தியின் எல்லைக்கே சென்றுவிட்ட பலர், இந்த உலகில் தொடர்ந்து வாழ விரும்பாமல் **தற்கொலையைத்தான்** தங்களின் **கடைசி முடிவாக** தீர்மானித்துவிடுகின்றனர்.

மனம்திரும்பி **இரட்சிக்கப்பட்ட** விசுவாசிகளே ஜெபம் செய்து தற்கொலை முயற்சியில் இறங்கிவிடுவதுதான் மிகவும் வேதனைக்குறிய விஷயமாக இருக்கிறது. நம் தெய்வத்தை ருசித்தவர்கள்,ஊழியம் செய்பவர்கள்,ஜெபகுழு நடத்துபவர்கள் மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுக்கும் நபர்களேகூட **தற்கொலையைத் தன்** வாழ்க்கையின் முடிவாக தீர்மானித்துவிடுகின்றனர்.

கடந்த மாதம் கணவன் ஒரு எம்டி படித்த டாக்டர் மனைவி **மனநோய்** சிகிச்சைக்காக படித்த ஒரு டாக்டர் இவர்களின் ஒரே மகள் 6ம் வகுப்பு படிக்கிறாள். வசதியுள்ள அழகான தனி குடும்பம்,கூட்டு குடும்பம் அல்ல. ஆனால் திடீர் என்று **மனநோய்** சிகிச்சை நிபுணரான மனைவியான அந்த பெண் டாக்டர் தன் அறையில் **தூக்குபோட்டு தற்கொலை** செய்து கொண்டார். கணவன்- மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கின்றனர். அவர்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை.

ஆனால், அந்த பெண் டாக்டர் தான் தற்கொலை செய்து சாகும்முன் எழுதிவைத்த கடிதத்தில் **என் மரணத்துக்கு** யாருமே காரணம் இல்லை. என் அன்பு கணவரோ, வேறு யாரும் காரணம் இல்லை. ஆனால் ஏனோ சில நாட்களாக என் **உள்ளத்தில் ஒரு வெறுமையை** உணருகிறேன். உள்ளத்தின் அடிதளத்தில் மிக அதிகமான வெறுமையை உணருகிறேன். என் வாழ்க்கையை ஏனோ என்னால் விரும்ப முடியவில்லை. காரணம் எனக்கே தெரியவில்லை!. ஆகவேதான் நான் இந்த தற்கொலை முடிவை எடுத்துக் கொண்டேன். என் தற்கொலையினால் என் குடும்பத்துக்கு கெட்ட பெயர் உண்டானது. எல்லாரும் என்னை மன்னிக்கவேண்டும். அதோடு என் கடைசி வேண்டுகோளை நிறைவேற்றவேண்டும். என் சரீரத்தை போஸ்ட்மார்ட்டம் செய்து வீட்டுக்கு கொண்டுவரும்போது என் **செத்த சரீரத்தை** என் மகள் **பார்க்கக்கூடாது.** அவள் மனநிலை பெரிதும் பாதிக்கப்படும். தயவுசெய்து இதை நிறைவேற்றுங்கள் என்று எழுதிவைத்திருக்கிறார்.

இந்த தற்கொலையில் குடும்பத் **தகராறு இல்லை, கடன் தொல்லை இல்லை, மாமியார்** கொடுமை அல்லது இரகசிய காதல் தொடர்பு இப்படி எந்த ஒரு காரணமும் இல்லை. ஆனால் அந்த லேடி டாக்டருக்கு வாழ பிடிக்கவில்லை. **2018 பிப்ரவரி மாத இந்து,தினகரன்** ஆகிய பத்திரிக்கைகளில் வந்த இந்த செய்தியில் போலீஸ்சாரால்,பத்திரிக்கை நிருபரர்களால் இந்த டாக்டரின் தற்கொலைக்கான காரணம் இன்னும் கண்டுபிடிக்கமுடியவில்லை.

இப்போதெல்லாம் இப்படி **காரணம் இல்லாமல்** சின்ன சின்ன காரியத்துக்கும் **தற்கொலைகள்** செய்துகொள்வது சர்வ சாதாரணமாகிவிட்டது. ஏன்?.

தற்கொலை செய்துகொண்ட அந்த **மனநோய் மருத்துவருக்கே** தான் ஏன் தற்கொலை செய்து கொள்கிறோம் என்று அவளுக்கே விளங்கவில்லை. இது கோழைத்தனமுமல்ல ?

■ இயேசுவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவ விசுவாசிகளே அதுவும் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் மாமியார் **தன் கணவனை** மிக அதிகமாக நேசிக்கிறார். அதே சமயம் மாமியார், **மருமகளான என்னையும்** நேசிக்கிறார். அவர் நல்ல மாமியார்தான், ஆனால் என் கணவர் என்னைவிட அவருடைய தாயை **நேசிப்பது** என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகவே என் 3வயது சிறுமியை விட்டுவிட்டு நானே **தற்கொலை** செய்துகொள்கிறேன். எல்லாரும் என்னை மன்னித்துவிடுங்கள் என்று கடிதம் எழுதிவைத்து தற்கொலை செய்துகொள்ளும் M.A.,M.Ed., (டிகிரி எடுத்த இப்படிப்பட்ட படித்த முட்டாள் பெண்களும் அதிகம்பேர் உண்டு. இதை **பொசஸ்ஸிஷ் சூசைட்** என்பார்கள். என் **மனைவி**, என் **கணவர்** என்னை மட்டும் நேசிக்க வேண்டும், இப்படி வெறித்தனமான அன்பு மிக ஆபத்தானது. அது கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இப்படிப்பட்ட எண்ணம் இருப்பது ஆபத்தானது. இவர்கள் உயிரோடு இருக்கும்போதும் மரித்த பின்னும் கர்த்தர் இப்படிப்பட்டவர்களை நேசிக்கமாட்டார். இப்படிப்பட்டவர்கள் ஜெபம் செய்துவிட்டு தற்கொலை செய்தாலும் மரிக்கும்முன் இவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாக **வாழ்ந்திருந்தாலும்** தங்களை தாங்களே கொலை செய்துகொண்டதால் நியாய தீர்ப்பில் **பரலோகம் செல்ல முடியாது.**

மத்தேயு 10ல் ஒருவன் தன் தகப்பனையாவது, தாயையாவது **என்னிலும்** அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல. மகனையாவது, மகளையாவது **என்னிலும்** அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல.

இதிலே கவனிக்க வேண்டியது: இயேசு கூறுகிறார், **என்னிலும் அதிகமாய்** யாரையும் நேசிக்க கூடாது என்கிறார். இது **தன்னலம்**(Selfishness) என்று சிலர் கூறுவார்கள், ஆம். இது கடவுளின் தன்னலம்தான். நம்மை மீட்க இயேசு தன் இரத்தத்தை விலைகிரயமாக சிலுவையில் கொடுத்து நம்மை விலைக்கு வாங்கிக்கொண்டார். ஆகவே நம் சரீரத்தின்மீது அவருக்கு சகல உரிமையும் உண்டு. இரட்சிக்கப்பட்ட நாம் யாவரும் அவருக்கு சொந்தம். நம் ஆசை முழுவதும் அவரையே பற்றியிருக்கவேண்டும். நம் இருதயத்தில் அவருக்கு மட்டும்தான் முழு இடம் கொடுத்து அவரையே சார்ந்திருக்கவேண்டும். இப்படி கூறுவதால் நாம் நம் கணவனை-மனைவியை, பிள்ளைகளை,பெற்றோரை நேசிக்கக்கூடாது என்பதல்ல, நம் தெய்வம் பாசம் இல்லாதவரல்ல. அவர் சிலுவையில் மரிக்கும்போதும் தான்பிறக்க கர்த்தர் உபயோகித்த மரியாளாகிய தாயை அனாதையாக அவர் விட்டுவிடவில்லை. பொருப்புள்ள மகனாக தன் மகன் ஸ்தானத்தில் இடத்தில் சீஷன் ஒருவனிடம் தன் தாயை ஒப்படைத்துதான் ஜீவனை விட்டார்.

ஆகவே நாம் நம் குடும்பத்தை நேசிப்பதில் பிழைஏதும் இல்லை. ஆனால் கர்த்தர் நம்மிடம் எதிர்ப்பார்ப்பது நம்முடைய **முழு இருதயத்தை** கர்த்தருக்கு ஒப்படைத்துவிடவேண்டும். நீதிமொழிகளில் மகனே, மகளே **உன் முழு இருதயத்தையும் எனக்கு தந்துவிடு**,என் கர்த்தர் கேட்பதாக எழுதியுள்ளது மாற் 12:30ல் **முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் தேவனிடம் அன்புகூறுவதுதான்** பிரதான கற்பனையாகும் என்று இயேசுகிறிஸ்து கூறினார். அப்பம் கேட்பது கடவுளின் உரிமையாகும். ஏன் என்று கேட்க நமக்கு உரிமையில்லை. நம்மை **களிமண்** என்று அடிக்கடி நினைவுப்படுத்துகிறார். கர்த்தரோ **தன்னை குயவனாக** ஒப்பிடுகிறார்.

நான் எழுதுவது மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்குமட்டும் பொருந்தும். அவர்கள் மட்டுமே இதன் ஆவிக்குரிய அர்த்தத்தை விளங்கிக்கொள்ளமுடியும். பெயர் கிறிஸ்தவர்களுக்காக நான் இதை எழுதவில்லை.

**நம் வாழ்க்கையில் நம் பிறப்பைவிட நம் வாழ்க்கையின் முடிவுதான் மிகமிக முக்கியம்.** அந்த முடிவுவரை நம்மை வழி நடத்தத்ததான் இயேசுகிறிஸ்து இன்றும் உயிரோடு இருக்கிறார் என்று எபி 7:25ல் கூறப்பட்டுள்ளது.

இயேசுகிறிஸ்துவை தெய்வமாக ஏற்றுக்கொண்டு வசனத்தின்படி சாட்சியுடன் வாழ விருப்பம் உள்ளவர் யாராக இருந்தாலும் சரி. **கால் ஊனம், கை ஊனம்,முகம் அழகில்லாதபடி** தீக்காயம் பட்டதுபோல் உருக்குலைந்து காணப்பட்டாலும்,பிறவி ஊனங்களோடு வாழ்ந்தாலும் சரி அவர்கள் இயேசுவை தங்கள் உள்ளத்தில் அழைத்து அவர் உள்ளத்தில் வாழ்பவராக இருந்தால் அவர்கள் பவுல் கூறுவதைபோல் **எல்லா சூழ்நிலையிலும்** மனோ ரம்மியமாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தன் வாழ்க்கையை தன்னைவிட நல்லை நிலையில் சுகத்தோடு, தோல்வியில்லாமல் உயர்ந்த நிலையில் உள்ளவர்களோடு தங்களை ஒப்பிட்டு பார்க்க விரும்பமாட்டார்கள்.

**டோனாவூர்** கைவிடப்பட்டவர்களின் விடுதியை ஸ்தாபித்த **எமி கார்மைக்கல் அம்மையார்** படுத்த படுக்கையில் **நடக்க இயலாமல்** திரும்பஇயலாமல், **உண்ணமுடியாமல்,** ஏன்! சிறுநீர் கழிக்ககூட முடியாமல் யோ 5ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் 38 வருடம் முடவனாய் படுத்த படுக்கையாய் இருந்தவன்போல் படுத்திருந்தார். அவனுக்காவது 38 வருடம் கழித்து இயேசு சுகம் கொடுத்தார். ஆனால் **எமி கார்மைக்கல் அம்மையார்** என்ற அந்த பெண் மிஷனிரிக்கு **மரணம் வரை** சுகம் கொடுக்கவீல்லை. ஒருவருடம்,இரண்டுவருடமல்ல நீண்ட 20 வருடங்கள் படுக்கையிலேயே தன் வாழ்நாளை கழித்து, எத்தனையோ குடும்பங்களுக்கு **ஆறுதலின் தாயாக** வாழ்ந்து மரித்தார். தன் **படுக்கையில் எழுதிய அவருடைய கடிதங்கள்,புத்தகங்கள்** இன்னும் எத்தனையோ பேரை **தற்கொலை** எண்ணத்திலிருந்து மாற்றி வாழ வைத்துள்ளது.

## நான்றுக்கொண்டு(தற்கொலை) செத்த இரண்டு நபர்கள்:

நாம் வேதத்தில் இரண்டுபேர் **தற்கொலை (நான்றுகொண்டு)** செய்து மரித்தார்கள். இன்று அவர்கள் எங்கு இருக்கிறார்கள் **நரகத்துக்கு ஆயத்தமாகி நியாய தீர்ப்புக்கு** காத்திருக்கிறார்கள்.

# அகித்தோபேல்:

ஒருவன் **அகித்தோப்பேல்** என்பவன், இவன் அரண்மனையில் நல்ல ஐடியா கொடுப்பவன். அதனால் ராஜா அவனை **ஆலோசனைக்காரனாக** வேலையில் அமர்த்திய முக்கியமான இக்கட்டான பிரச்சனைகள் வரும்போது **அகித்தோபேலை** அழைத்து ஆலோசனை கேட்பான். இவன் ஆலோசனைகள் அன்றைய நாட்களில் தேவனுடைய வாக்கைப்போல இருந்தது. (2 சாமு 16:23) என்று அரண்மனை மக்கள் கூறுவார்கள்.

**தாவீது** மகன் **அப்சலோம்** தன் தகப்பனையே கொல்ல படையெடுத்தபோது பெரும்பான்மை மக்கள் இன்னும் தன் தகப்பானரை நேசிக்கிக்கிறார்கள் என்பதை அறிந்தான். அப்போது அகித்தோப்போல் கொடுத்த **ஆபாசமான ஆலோசனையின்படி** செய்தால் இஸ்ரவேல் ஜனங்கள் **அப்சலோம் ராஜா** அவன் தந்தையாகிய தாவீதை வெறுக்கிறான் என்று அறிந்து ராஜா வெறுக்கும் தாவீதை நாமும் வெறுத்தால் நாளை அப்சலோம் ஆட்சியில் வந்தால் தங்களுக்கு சலுகைகள் கிடைக்கும். **அப்சலோம்** கண்களில் தங்களுக்கு தயவு கிடைக்கும் என்று நம்பி அப்சலோம் பக்கம் முழுவதுமாய் சேர்ந்து போரில் ஜெயம் பெற செய்வார்கள். இப்படிப்பட்ட ஆலோசனையும் யுத்தத்துக்கு புறப்படும் வகையையும் **அகித்தோபோல்** ஆலோசனையாக **அப்சலோம்** ராஜாவிடம் கூறினான். **அகித்தோபோல்** தாவீதுக்கு எதிராக ஆலோசனை கொடுத்த செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த சூழ்நிலையில் இரண்டாவது ஆலேசானையாக(செகன்ட் ஒப்பினியனாக) **அப்சலோம்** மற்றொரு ஆலோசனைக்காரானான **ஊசாயை** அழைத்து ஆலோசனை கேட்க அந்த ஆலோசனை தான் நல்லது என்று அரண்மனையிலுள்ள எல்லாரும் கூற உடனே அகித்தோபேலின் ஆலோசனையை ஒதுக்கிவிட்டு **ஊசா** கூறின ஆலோசனையின்படி யுத்தம் செய்ய அப்சலோம் புறப்பட்டுவிட்டான்.

இப்போது அகித்தோபேலுக்கு விளங்கிவிட்டது. இந்த யுத்தத்தில் நிச்சயமாக அப்சலோம் தோற்றுப்போவான். **தாவீது ஜெயித்துவிடுவார்** என்பதை உணர்ந்தான். தாவீது ஜெயித்து அரசனாகிவிட்டால் தாவீதுக்கு எதிராக முதல் ஆலோசனை கொடுத்த **அகித்தோபேலாகிய தன்னை** நிச்சயம் கொலை செய்துவிடுவார் என்பதை அறிந்து நேரே வீட்டுக்கு வந்து ஒழுங்காக மரணத்துக்கான ஆயத்த ஏற்பாடுகளை செய்து **தற்கொலை** செய்துகொண்டான். அதாவது குடும்ப காரியங்களை ஒழுங்காக்கி,பிள்ளைகளுக்கு சொத்துக்களை பிரித்து, அவரவர்களுக்கு செய்ய வேண்டியதை யெல்லாம் ஒழுங்காக செய்து முடித்துவிட்டு **நான்றுகொண்டு** (தூாக்குபோட்டு) செத்தான் என்று எழுதியிருக்கிறது.

## அவன் தற்கொலை செய்ய காரணம் என்ன?:

தன் வேளையில் ராஜாவுக்கு சேவை செய்ய வேண்டியவன். மகன் அப்சலோம் தன் தகப்பானகிய ராஜாவை **ஜெயித்து விடுவான்** என்ற நம்பிக்கையில் **கட்சி மாறி** தாவீது ராஜாவின் மகனுக்கு சாதகமாக மாறிவிட்டான். தன்னை ஆளாக்கிய **ராஜாவையே கொலை** செய்து **மகன்** ஆட்சியில் தன் பதவி நீடிக்க திட்டமிட்டான். தன் திட்டம் தோற்றுப்போனதும், தான் தன் **ராஜாவுக்கு துாரோகம் செய்ததும்** அவன் உள்ளத்தை வாதித்து ராஜா தன்னை கொன்றுவிடுவான் என்று பயந்து தானே தற்கொலை செய்து கொண்டான்.

ஒருமுறை **சீமேயு** என்பவன் தாவீது ராஜா அகித்தோப்பேலலை மன்னித்திருப்பார். **தாவீது ராஜாவை** ஜனங்களின் முன்பாக கெட்ட வார்த்தைகளால் பகிரங்கமாக திட்டி (ஏசி) அனைத்து மக்கள் முன்னிலையிலும் **ராஜாவை** மிகவும் அவமானப்படுத்தினான். ராஜாவின் தளபதி அவனை கொல்ல ராஜாவிடம் உத்தரவு கேட்டான். ஆனால் ராஜாவோ தான் இப்போது அதிகாரத்தில் இல்லாத இந்த நிலையில், தான் மற்றவர்கள் முன்பாக சிறுமைப்படுத்தப்பட்ட நிலையில் **தாவீது ராஜா** கூறுகிறான்.

**கர்த்தர் அனுமதிக்காமல்** அந்த **சீமேயு** என்பவன் என்னை அவமானப்படுத்த மாட்டான். அவனை ஒன்றும் செய்யவேண்டாம் அவனை விட்டுவிடுங்கள் என்று மன்னித்துவிட்டான்.

அதுபோல அகித்தோபேலுக்கும் **மன்னிப்பு** கிடைத்திருக்கலாம். ஆனால் அகித்தோபேல் அவசரப்பட்டு விட்டான். மேலும் தான் செய்தது **ராஜ துரோகம்** என்ற பயம் அவனை வாதித்தால் தற்கொலை செய்துகொண்டான்.

## நான்றுக்கொண்டு செத்த இரண்டாம் நபர்:

இயேசுகிறிஸ்து தெரிந்தெடுத்த 12 சீடர்களில் ஒருவனாகிய **யூதாஸ்காரியத்து** என்பவன் **இயேசுவை காட்டிக்கொடுத்தவிட்டோமே** என்று குற்றஉணர்வு தன்னை வாதிக்க வாழ பிடிக்காமல் அழுதபடியே **நான்றுக்கொண்டு** செத்தான்.

**யூதாஸ்காரியத்துக்கு** பலமுறை கர்த்தர் எச்சரிப்பு கொடுத்தர். ஆனாலும் பணத்தின்மீது கொண்ட ஆசையால் **குற்றமற்றவரை,** தன்னை கர்த்தருடைய சீஷனாகவும், ஊழியக்காரானாகவும் ஆக்கிய தன் **குருவையே** கொலை செய்ய காட்டிக்கொடுத்தான்.

இதிலே கவனிக்கவேண்டிய விஷயம்: **ஆண்டவரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சீஷன், ஆண்டவரை புரிந்து வைத்திருந்த சீஷன்** எப்படி இப்படிப்பட்ட **பயங்கர துாரோகத்தை அவன் செய்தான். அவன் இயேசுவை நேசிக்காதவன் அல்ல. நன்றாக நேசிக்கிறவன்தான். ஆனால் அவன் தப்பு கணக்கு போட்டுவிட்டான்.**

**இயேசுகிறிஸ்துவுக்கு மறையும் தன்மை உண்டு** என்பதை அவன் அறிவான். பலமுறை இயேசு பிரசங்கிக்கும்போது ஜனங்கள் அவரை **கல் எறிந்து** கொல்லப்பார்த்தார்கள். அவர் உடனே **மறைந்துபோனார்**(Disappear) ஆக இயேசுவுக்கு **மறையும் தன்மை** உண்டு. ஆகவே **இயேசுவை** காட்டிக்கொடுக்க **30 வெள்ளி காசுக்கு பேரம்பேசி** அவரை காட்டிக்கொடுத்து விடுவோம். அவர்கள் இயேசுவை பிடிக்கமுயலும்போது அவராக எப்போதும்போல **மறைந்துபோவார்** என்ற பிழையாக எண்ணிவிட்டான்.

ஆனால், ஆண்டவரோ தானே முன்வந்து தன் கைகளை நீட்டி அந்த இருட்டில் **என்னையா தேடுகிறீர்கள்**? இதோ என்னை பிடித்து போங்கள் என்றார்.

இதைக்கண்ட **யூதாஸ்** தான் நினைத்தது வேறு, ஆனால் நடந்தது வேறு. மிகப்பெரிய தவறு செய்துவிட்டோமே என்று தன் கையிலிருந்த 30 வெள்ளிகாசை துாக்கி எறிந்துவிட்டு தனிமையில் போய் **குற்றமற்றவரை கொலை செய்யப்பட நானே காரணமாகிவிட்டேனே, என்று மனம் கசந்து அழுதான். யூதாஸ்காரியத் காட்டிகொடுத்த விஷயத்தில் அவன் உள்ளம் மிகவும் வாதித்தது.**

பலமுறை கர்த்தர் என்னை எச்சரித்தாரே! நான் செவி சாய்க்கவில்லையே!. தன்னை ஒருவன் காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பதை முன் கூட்டியே சீஷர்களுக்கு முன்பாக அன்று கடைசியாக இரவு ஆகாரம் **சாப்பிடும்போதுகூட சாடையாக** கூறினாரோ என்று புலம்பினான். மேலும் அன்று இரவு சீஷர்களுக்கு முன்பாக **யூதாஸ்தான்** என்னை காட்டிக்கொடுக்கப்போகிறான் என்பதை இயேசு அறிந்தும் அவர் வெளியரங்கமாக கூறி இயேசு அவனை அவமானப்படுத்த முயலவில்லையே! அவனை மற்றவர்கள்முன் **காட்டிக்கொடுக்கவும்** முயலவில்லை. எத்தனை **அன்பான தெய்வம்** என்ற **குற்றஉணர்வு** வாதிக்க கண்ணீர்விட்டு **அழுது நான்றுக்கொண்டு** செத்தான். திருந்தி மன்னிப்பு பெற்று யூதாஸ் வாழ விரும்பாமல் தற்கொலை செய்துகொண்டான்.

வேதத்தில் எழுதியுள்ள **தற்கொலைகளில்** நான்றுக்கொண்டு செத்தவர்கள் இரண்டு பேர். மற்றவர்களும் சிலரும் கத்தியை நிற்கவைத்து அதன்மேல் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்கள். ஆனால் மேலே வாசித்த **அகித்தோபேல்** என்பவனும்- **யூதாஸ் காரியேத்தும்** மட்டும் நான்றுக்கொண்டு செத்தவர்கள் என்று வேதம் கூறுகிறது.

**தற்கொலைகள் செய்து மரித்தவர்கள் பலர் குற்ற உணர்ச்சியினால் வாதிக்கப்பட்டு தற்கொலை** செய்து கொண்டார்கள் என்று அறிகிறோம்.

இப்போதெல்லாம் **தமிழ்நாட்டிலும்,இந்தியாவிலும்** சின்னசின்ன அற்ப விஷயங்களுக்கொல்லாம் உடனே **தற்கொலை** செய்துகொள்கிறார்கள்.

**(பிசாசு) அவன் கொல்லவும்,அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்.** யோ 10:10.

தற்கொலைகள் செய்தவர்கள் எந்த **காரணத்துக்காக தற்கொலை செய்தாலும்**, அவைகள் யாவும் **பிசாசின்** கிரியைகள் ஆகும். காரணமே இல்லாமல் **தற்கொலை செய்து** கொள்வதை கடந்த இரண்டு வருடங்களாக பத்திரிக்கைகளில் வாசிக்கிறாமே!.

■ **தமிழ் மீடியம்** கிராம பள்ளியில் 6ம் வகுப்பு படிக்கும் இரண்டு சிறுமிகள் வகுப்பில் மிகவும் சேட்டை செய்துகொண்டிருந்தார்கள். வகுப்பு நடக்கும்போது இவர்கள் இருவர்மட்டும் எப்போதும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டேயிருப்பதை ஆசிரியை பலமுறை கண்டித்தார்கள். கீழ்ப்படியவில்லை. ஆகவே அந்த இரண்டு பிள்ளைகளையும் இடம்மாற்றி அமர வைத்தார்கள். அப்போதும் வகுப்பு நடந்து கொண்டியிருக்கும்போது வேண்டுமென்றே கை சாடை காட்டியும் பேசியும், சிரித்துக்கொண்டும் இருந்தார்கள். உடனே டீச்சர் அந்த பிள்ளைகள் இருவரிடம் நீங்கள் உங்கள் பெற்றோரை நாளை வந்து என்னை காணும்படி நான் சொன்னதாக போய் கூறுங்கள் என்றார். கொஞ்சம் உயர்ந்த பள்ளியாயிருந்தால் அந்தந்த வகுப்பு ஆசிரியைகள் பிள்ளைகளின் பெற்றோருக்கு SMS அனுப்பி பள்ளிக்கு வரசொல்லி விடுவார்கள். ஆனால் இந்த கிராம பள்ளியில் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் இல்லை. அன்று மாலை பள்ளி முடிந்தவுடன் இந்த இரண்டு சிறுமிகளும் வீட்டுக்கு போகும் வழியில் ஒரு குளத்தில் இரண்டுபேரும் ஒருவர் கையை ஒருவர்பிடித்து தண்ணீரில் குதித்து உயிரை விட்டார்கள். தற்கொலை செய்துகொண்டார்கள்.

**முதிர்ச்சி பெறாத** இந்த சிறுமிகள் பெற்றோருக்கு பயந்ததால் அப்படிப்பட்ட முடிவுக்கு வந்தார்களா? ஒருவிதத்தில் அது பயத்தால் இருக்கலாம் என்றும் கூற இயலாது. காரணம் இதைவிட பெரிய தவறுக்கொல்லாம் பெற்றோர் இவர்களை கடிந்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆசிரியையும் பலமுறை இவர்களை தண்டித்து இருக்கிறார்கள். அப்படியிருக்க இப்படிப்பட்ட சின்ன காரணங்களுக்கு இந்த சிறுமிகளை தற்கொலை செய்ய தூண்டியது எது? அது **பிசாசின்** கிரியைகளேயன்றி வேறல்ல?. நாம் யாவரும் வாழவேண்டும் என்பதுதான் தேவனின் விருப்பம். துன்மார்க்கனைகூட கர்த்தர் வாழவேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறார்.

**பிசாசு கொலை செய்ய தீவிரிக்கிறான். நானோ அவனுக்கு ஜீவன் உண்டாக்கவும், பரிபூரணப்படவும் வந்தேன்.** யோ 10:10.

**துன்மார்க்கன் சாகிறது** எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? **அவன் தன் வழிகளைவிட்டு** திரும்பிப் பிழைப்பது அல்லவோ, எனக்கு பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறர். எசே 18:23, 33:11.

ஆகவே **தற்கொலை** செய்துகொள்ளுகிறவர்கள் **கோழைகளானதால்** தற்கொலை செய்துகொண்டார்கள் என்று எண்ணக்கூடாது. அவைகள் யாவும் **பிசாசின் கிரியைகள்** ஆகும்.

இயேசுவின் **சீஷன்** யூதாஸ்காரியத் தான் செய்த தவறுக்கு வருந்தி கர்த்தரிடம் **மன்னிப்பு கேட்டு பிழைக்க** தீர்மானிந்திருந்தால் **கர்த்தர் சந்தோஷமாக** அவனை வாழ வைத்திருப்பார். **தவறை உணர்ந்தான்** ஆனால் அந்த **தவறை திருத்திக்கொண்டு வாழ** அவன் ஆசைப்படவில்லை.

நியாயமாய் பார்த்தால் **யூதாசைவிட** பெரிய **துரோகமும்,பாவமும்** செய்தவன் **பேதுருதான். யூதாஸ்** காட்டிக்கொடுக்கமாட்டுமே செய்தான். ஆனால் பேதுருவோ, **வானத்தையும்,பூமியையும்** படைத்த தெய்வமாகிய **கர்த்தரை மறுதலித்தான்.** அதாவது அந்த **மனுஷனை** எனக்கு **தெரியவே தெரியாது** என்று கூறினான். அதோடு நிற்கவில்லை. **இயேசுவை சபிக்கவும்** தொடங்கினான். அதாவது தான் தப்பிக்க கூறிய **பொய்யை** அவர்கள் **நம்பவில்லை** என்று அறிந்ததும்! எப்படி கூறினால் அவர்கள் நம்புவார்கள் என்று யோசித்து இயேசுவை **சபிக்க** தொடங்கினான். **சபிப்பது** என்றால் என்ன? **நீ நாசமாக போகவேண்டும், நீ அழிந்துதான் போகணும்** என்றொல்லாம் சாபிப்பார்கள் அல்லவா? அதைப்போல **பேதுரு இயேசுவை சபிக்கிறான்.** இயேசுவை அறியாதவன் அப்படி சபித்தால் அது பிரச்சனையல்ல. மற்ற எல்லா சீஷர்களைவிட கிறிஸ்துவை நன்கு அறிந்த ஒரு **பிரதான சீஷன் இயேசுவை** சபித்தால் எப்படி?

ஒருமுறை இயேசு **பேதுருவைப்பார்த்து** என்னைப்பற்றி (இயேசுவை) **நாட்டு மக்கள் என்ன கூறுகிறார்கள்** என்று கேட்டார். பேதுரு பதில் கூறினார். சரி. நீ என்னைப்பற்றி என்ன நினைக்கிறாய் என்றார். அதற்கு பேதுரு **நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்** என்று பதில் கூறினார். அதற்கு இயேசு இந்த பதிலை நியாய் கூறவில்லை. **பிதாவானாவர் உனக்கு மட்டும் இதை வெளிப்படுத்தியிருக்கிறார்** என்று கூறினார். அப்படி எந்த சீஷனுக்கும் வெளிப்படுத்தாத இந்த **தேவ இரகசியத்தை பிதா பேதுருவுக்கு மாத்திரம் வெளிப்படுத்தினார்** என்றால் அந்த அளவு பிதாவோடு நெருக்கம் கொண்டு சகலமும் அறிந்த **பேதுரு** உலகத்தைப்படைத்த **தேவாதிதேவனை நாசமாய்போக** என்றும், அவரைப்பற்றி **எனக்கு தெரியாது** என்றும் பகிரங்கமாக மனசாட்சியற்றவனாக தன்னை காப்பாற்றிக்கொள்ள அப்படி ஒரு **பொய்யை** துணிந்து கூறியிருக்கிறானே?. இது மிகப்பெரிய பாவம் அல்லவா!.

அதனால்தான் முன்பே கூறினேன். **யூதாசைவிட பேதுருதான் அதிக பாவம் செய்தவன்.** யூதாஸ் **காட்டிக்கொடுத்தான்**. ஆனால் பேதுரு **சபித்து** ஆண்டவர் மனதை வேதனைப் படுத்தினான். **யூதாஸ்** தவறான கணக்குபோட்டு நடக்கப்போவதை அறியாது அந்த குறிப்பிட்ட **பாவம்** செய்தான். ஆனால் **பேதுருவோ** முழுவிபரமும் தெளிவாக அறிந்தும் **பொய் பேசி பாவம்** செய்தான். ஆனால் யூதாசைப்போல தற்கொலை செய்ய முயலவில்லை. தனியே மனம் கசந்து அழுது பாவமன்னிப்பை பெற்று இயேசுகிறிஸ்துவுக்காக அவன் கெஞ்சிக்கேட்டுக்கொண்டது. ஐயா, என்னை கிறிஸ்துபோல சிலுவையில் அறையாமல் என்னை சிலுவையில் தலைகீழாக ஆணி அடித்து கொன்றுவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டான். அப்படியே அவன் மரணம் நிறைவேற்றப்பட்டது.

ஆகவே எந்த மனிதனும் சாவதை கர்த்தரும் விரும்புவதில்லை. மனந்திரும்பி பிழைப்பதையே விரும்புகிறார். இதை வாசிக்கும் நீங்கள் எத்தனை பெரிய பாவம் செய்தாலும் பயம் வேண்டாம். இயேசு **இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவர்.** இவர் மன்னித்து வாழ வைப்பார். எத்தனை பெரிய அவமானம்,கடன்கள் இருந்தாலும் நீங்கள் சாகக்கூடாது,தற்கொலை செய்யக்கூடாது. உங்களுக்கு கர்த்தர் ஒரு புது வழியை உண்டுபண்ணுவார். எல்லாவற்றிக்கும் ஒரு முடிவு உண்டு. அது நீண்டுபோகாது என்று ஆண்டவர் கூறுகிறார். நிச்சயம் ஒரு புது வாழ்வு உண்டு. சோர்ந்துபோக வேண்டாம். **தற்கொலைக்கு** போகாதீர்கள். இத்தனை வருடம் கிறிஸ்வுக்காக வாழ்ந்த வாழ்க்கை முழுவதும் வீணாய் போய்விடும். தற்கொலை உங்களை **நரகத்துக்கு** அழைத்து செல்லும். ஜாக்கிறதை!.

இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால், **யூதாஸ்காரியத் அழுதான், பாவத்தை உணர்ந்தான்.** ஆனால் **திருந்தி வாழ முயலவில்லை.**

**பேதுருவும்** மனம் கசந்து அழுதான். **மனந்திரும்பி வாழ** தீர்மானித்தான். பேதுரு தன் **தவறை** திருத்திக்கொண்டது மட்டுமல்ல, அதற்கு பரிகாரமாக ஊழியத்தில் மரணத்துக்கும், சித்திரவதைக்கும் தன்னை துணிந்து ஒப்புக்கொடுத்து **இரத்த சாட்சியாய்** மரித்தான். அதோடு மட்டுமல்ல, இயேசுவுக்கு நான் செய்த துரோகத்துக்கு பதிலாக தன் மரண நாட்களில், இரத்த சாட்சியாய் **மரிக்கும் சூழ்நிலை** வந்தபோது தன்னை **தலைகீழாக** சிலுவையில் அறையும்படி வேண்டிக்கொண்டு அப்படியே மரித்தான்.

## முடிவாக நான் கூறுவது:

நீங்கள் **மனந்திரும்பின இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவராக** இருந்தால் நீங்கள் அனுபவிக்கும் பாடுகள், காரணமில்லாமல் உங்கள்மேல் வரும் **குற்றசாட்டுகள், சுகமாகாத வருட கணக்கில் சுமந்துக்கொண்டிருக்கும் வியாதிகள்,கடன்தொல்லைகள்,சொந்த கணவனின் தாங்கமுடியாத துன்பங்கள்**, சில வீடுகளில் மனைவியால் கணவன்மார்களுக்கு ஏற்படும் துன்பங்கள், **மாமியார்,நாத்தனர்** உறவினரின்கொடுமைகள்,வேலை செய்யும் இடங்களில் காரணமில்லாமல் உங்களை வெறுப்பவர்களால் எற்படும் **மனஉளச்சல்**, தங்கள் பிள்ளைகளின் தவறான ஜீவியத்தால் பெற்றோர்களுக்கு ஏற்படும் மனவேதனை,**அழகு** இருந்தும்,**படிப்பிருந்தும், வசதிகள்** இருந்தும் **திருமணமாகாது** வாழாவெட்டியாய் வீட்டில் வாழும் விரக்தியுள்ள வாழ்க்கை வாழும் பெண்கள் ஏராளம். தங்கள் திருமணத்துக்கு வீட்டில் யாரும் பொருப்பெடுக்காதது **திருமண**

**வயது** கடந்த நிலையில் வாழும் இப்படிப்பட்ட பெண்களின் பிரச்சனைகளில், இயேசுவை நேசிக்கும் இரட்சிக்கப்பட்ட நீங்கள் **சோர்ந்துபோக வேண்டாம்.** அதிகம் இவைகளைப்பற்றி நீங்கள் யோசித்துகொண்டேயிருந்தால் வாழ்க்கையை வெறுக்கும் நிலையை அடைவீர்கள். என்றாவது ஒருநாள் உங்கள் வாழ்க்கை உங்களுக்கு கசந்துவிடும். ஜெபித்து என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன் என்று கூறி **தற்கொலை** செய்துகொள்வீர்கள். **ஒரு பக்கம் பரிசுத்த ஆவியானவர் - மறுபக்கம் பிசாசின் ஆவி** இவை இரண்டின் மத்தியில் நடக்கும் போராட்டம் உங்களை தூங்கவிடாது. நான்கு நாட்கள் தொடர்ந்து நீங்கள் **தூங்காமல்போனால் டிப்ரஷன்** என்ற மனநோயில் அகப்படுவீர்கள். மற்றவர் பார்வைக்கு வெளிபார்வையில் தெரிவிக்கப்படாத **மனநோயாளியாக** மாறிவிடுவீர்கள்.

நம் ஆண்டவரை நாம் ஏற்றுக்கொள்ளும்போதே கர்த்தர் தன் வழியைப்பற்றி **சிலுவைபாதையைப்பற்றி நமக்குமுன் அறிவித்துதான் அவர் தன் பிள்ளையாய் நம்மை ஏற்றுக்கொள்கிறார்.**

**(நீங்கள் இயேசுவை) விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாய் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.** பிலி 1:29.

அன்றியும் **கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.** 2 தீமோ 3:12.

**என்றாலும் (நீங்கள்) துன்படப்வேண்டியது அவசியமானதால் இப்போது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்.** (துன்பப்பட வேண்டியது அவசியம் என்கிறார்). **கர்த்தர் அனுமதிக்கும் துன்பத்தில் தோல்வியில் ஒரு இன்பம் இருக்கும். இரட்சிக்கப்பட்டிருந்தால்தான் துன்பத்தில் இன்பம் அனுபவிக்கமுடியும்.**

**நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.** சங் 34:19.

இதை வாசிக்கும் ஜாமக்காரன் வாசகர்களே, வீட்டுக்குவீடு வாசற்படி என்ற பழமொழிபடி பிரச்சனையில்லாத குடும்பமே கிடையாது. சில ஊழியர்களேகூட சில சமயங்களில் **கர்த்தாவே நான் ஊழியம் செய்து ஓய்வு பெற்று உமக்கென்று அலைந்து** இப்போது படுக்கையில் எழுந்திருக்கமுடியாமல் திரும்பி படுக்கமுடியாமல் இருக்கிறேன். பலர் எனக்கு உதவி செய்ய எப்போதும் என் அருகே இருக்கும் இந்த நிலை வருடக்கணக்கில் நீண்டுவிட்டது. வாழ்க்கையில் எனக்கு **சலிப்பு** ஏற்பட்டுவிட்டது. மற்றவர்களுக்கு நான் **பெரும்பாரமாக** இருக்கிறேன். சில வருடமாக இப்படியிருந்தால் கூட பரவயில்லை. **பல வருடங்களாக** இந்த பாடுகளை அனுபவித்து வருகிறேன். இதைக்கூட நான் தாங்கிக்கொள்வேன். காரணம், **நான் ஊழியக்காரன்.** ஆனால் என் வீட்டில் சிலர் என் காதுபட **என் மனம் வேதனைப்படும்படி** பேசுவது என் இருதயத்தை துளைக்கிறது. கர்த்தரும் அதை அறிவார். படுக்கையில் உள்ள நான் ஊழியத்துக்கும் பிரயோஜன மில்லாமல், வீட்டுக்கும், நான் பெற்ற பிள்ளைகளுக்கும், குறிப்பாக **என் மருமகளின் வெறுப்புக்கும்** ஆளாகியிருக்கும் என்னை ஏன் ஆண்டவர் எடுத்துக்கொள்ள மறுக்கிறார்?, இது நீண்டுபோனால் நான் என் கர்த்தரை வெறுத்துவிடுவேனோ! என்ற பயம் இப்போது எனக்குள் வர ஆரம்பித்துவிட்டது. டாக்டர் ஐயா, தயவுசெய்து ஜெபத்தில் நீங்களாவது ஆண்டவரிடம் என்னை

எடுத்துக் கொள்ளும்படி சிபாரிசு **ஜெபம்** செய்யமாட்டீர்களா?என்று அறிவித்தார். இதை அறிவித்தவுடன் நானே என் சொந்த செலவில் இவர் ஒருவரை பார்க்கமட்டுமே சில ஆயிரம் கிலோமீட்டர் **ரயில் பயணம்** செய்து அவரை நேரில் சந்தித்து **ஆறுதல்படுத்தி - மரணத்துக்கு** அவரை ஆயத்தப்படுத்திவந்தேன்.

அப்போது நான் அவரிடம் வசனத்தின் மூலம் கூறியதாவது: **ஐயா, நம் கர்த்தர் மனப்பூர்வமாய் மனுபுத்திரனை சிறுமையாக்கி சஞ்சலப்படுத்துகிறதில்லை.** புல 3:33. இதில் ஏதோ நோக்கம் இருக்கலாம்.

ஆண்டவருக்கு எல்லா விஷயத்திலும் ஒரு நோக்கம் உண்டு. நீங்கள் கஷ்டம் அனுபவிக்கிறீர்கள் என்றும் **பரலோகத்துக்கு போகவேண்டும்** என்று வாஞ்சிக்கிறீர்கள் என்றும் கர்த்தருக்கு நன்றாகத்தெரியும். நீங்கள் படும் **கஷ்டத்தையும்,அவமானத்தையும்** கர்த்தர் ரசிக்கிறார் என்றா நினைக்கிறீர்கள்?. உங்களை நினைத்து அவர் மனமும் எத்தனையாய் வேதனைப்படும் தெரியுமா?

**அவர் வழி தனி வழி**

**அவர் உபதேசம் தனி உபதேசம்.**

யோ 17:15ல் இயேசுகிறிஸ்து தன் தனி ஜெபத்தில் உபயோகிக்கும் வார்த்தையை கவனியுங்கள், பிதாவிடம் நம்மைக்குறித்து என்ன சிபாரிசு செய்கிறார் என்பதையும் கவனியுங்கள்!.

**உலகம் அவர்களை(உங்களை) பகைத்தது, ஆனாலும் பிதாவே (அந்த உபத்திரவ சூழ்நிலையுள்ள) அவர்களை உலகத்திலிருந்து அவர்களை எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களை தீமையினின்று காக்கும்படி(மாத்திரம்) வேண்டிக் கொள்கிறேன்** என்கிறார். யோ 17:15.

ஆம். நம் ஆண்டவர் நமக்காக செய்யும் **ஜெபமே இப்படியானால் நம்மிடம் இன்னும் என்னவெல்லாம் சகிக்கும்படி எதிர்ப்பார்க்கிறார் என்று யோசித்துபாருங்கள். அது மட்டுமல்ல.** அதற்கான **ஞானத்தையும் தாங்கும் சகிக்கும் பெலத்தையும்** நமக்கு தருகிறார்.

இதினால்தான் **முன்றாம் பக்கம் இயேசுவின் வித்தியாசமான வழி நடத்துதல்** என்ற தலைப்பை எழுதினேன்.

கடைசியாக நான் கூறும் ஆலோசனை என்னவென்றால், **வீட்டில்,அலுவலகத்தில் மனைவியை, மாமியாரை, கணவரை** நீங்கள் மாற்ற முயற்சிக்காமல் உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். காரணம், **குடும்பம் உடையக்கூடாது. சாட்சி கெட்டுவிடக்கூடாது, பிள்ளைகள் அனாதையாகிவிடக்கூடாது.**

நீங்கள் **வீட்டில் செய்யும் ஜெபம் உங்கள் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர் பார்க்கட்டும். நீங்கள் வேதம் வாசிப்பதையும்** உங்கள் சாட்சியுள்ள சுபாவத்தையும் உங்கள் குடும்பத்தினர் பார்க்கட்டும். தானாக உங்கள் வீட்டில் எல்லாரும் உங்களை கனப்படுத்துவார்கள். உங்கள் மனைவி அல்லது கணவன் உங்களை மதிக்கதொடங்குவார்கள்.

அப்போது உங்கள் வாழ்க்கை உங்களுக்கு கசக்காது, உங்கள் **காதுபட உங்களை வேதனைப்படுத்தும் வார்த்தைகளை யார் பேசினாலும்** அதை அலட்சியப்படுத்துவீர்கள்.

**அதை கவனிக்காததைப்போல** இருப்பீர்கள். அந்த சாட்சியுள்ள **கிறிஸ்துவின் சகிப்பு, பொறுமை** இவைகளில் நீங்கள் பழக்கப்பட்டால் அதில் **தனி இன்பம்** உங்களுக்கு உண்டாகும். **துன்பத்திலும்** நீங்கள் துதிப்பீர்கள், வீட்டில் **யார் மரித்தாலும் துதிக்க** கற்றுக்கொள்வீர்கள்.

அன்பானவர்களே, நீங்கள் வாழவேண்டும், எந்த காரணம் கொண்டும் **தற்கொலைக்கு** போய்விடாதீர்கள். நீங்கள் எத்தனை பெரிய விசுவாசியாய் இருந்தாலும் உங்கள் வாழ்க்கையை நீங்களாய் முடித்துக்கொள்ள தற்கொலை மூலம் முயன்றால் நரகம் நிச்சயம். அதாவது கர்த்தர் உங்கள் ஆயுளைக்குறித்து தனக்குள் வைத்த திட்டத்தை உங்கள் தற்கொலை மூலம் தேவ திட்டத்தை கெடுத்துப்போட்டவராவீர்கள்.

**பிசாசு மட்டுமே தற்கொலைக்கு தூண்டுவான்.**

**பிசாசு மட்டுமே கொலை செய்ய தூண்டுவான்.**

அதற்கு நாமாக இடம் கொடுத்தால்தான் நம்மில் அவன்(பிசாசு) புகுந்து இப்படிப்பட்ட **கொலை - தற்கொலை** காரியங்களை செயல்படுத்துவான்.

**யூதாஸ்காரியத்** இயேசுவைக்காட்டிக்கொடுக்கும் முன் முதலாவதாக பிசாசு கிரியை செய்ய அவன்தான் இடம் கொடுத்தான். அவன் **இடம் கொடுத்ததால்தான் பிசாசு** அவனில் பிரவேசித்து அவனை கிறிஸ்துவுக்கு எதிராக செயல்படி **தூண்டினான்** என்று வசனம் கூறுகிறது. யோ 13:2.

அதன்மூலம் **யூதாஸ்** பிசாசுக்கு **தன்னில் பிரவேசிக்க இடம் கொடுத்தான்.** அவன் இடம் கொடுத்தபின் **பிசாசு அவனுக்குள் புகுந்தான்** என்று வேதம் கூறுகிறது. யோ 13:27.

அதன்பின்தான் **இயேசுவை காட்டிக்கொடுக்க தைரியப்பட்டான்.** அதனால்தான் **பேதுரு** தன் நிருபத்தில் எழுதும்போது **பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள். யாரை விழுங்கலாம் என்று கெர்சித்து திரிகிற சிங்கம் போல் சுற்றித்திரிகிறான்** என்று எழுதுகிறார். பிசாசு கர்த்தரின் அனுமதியில்லாமல் நம் இருதயத்தில் பிரவேசிக்க அவனுக்கு உத்திரவில்லை. நீங்களாக அனுமதித்தால், **வேதம் வாசிக்காமல்,ஜெபிக்காமல் சபை** ஆராதனைக்குப்போகாமல் **மனைவியை -கணவனை** வெறுப்பது இதெல்லாம் பிசாசை நாமாக அழைப்பதுபோல் ஆகும்.

ஆகவே **தற்கொலை முயற்சிவேண்டாம்** - நீங்கள் கர்த்தருக்கு வேண்டும். நீங்கள் கர்த்தருக்காக பல பிரச்சனைகளை சகிக்கவேண்டும். **அந்த சாட்சி** மூலம் ஆண்டவர் **மகிமைப்படுவார்.**

**தற்கொலை செய்வதற்க்கு முதல் காரணம் - பிசாசு**

இரண்டாம் காரணம் - **அவரவர்கள்தான் தற்கொலைக்கு காரணமாகிறார்கள்.**

அதிகமான எதிர்ப்பார்ப்பு(Over rexpectation) Ego,அளவுக்கு மீறிய சுயநலம், தோல்வியை, ஏமாற்றத்தை தாங்க முடியாத தன்மை, தன் சொந்த எண்ணத்தை வீட்டில் உள்ளவர்களிடம் திணிக்க முயன்று தோல்வி காண்பது, மற்றவர்களை தங்களுக்கு அடிமையாக்க நினைத்து அதில் ஏற்படும் தோல்வியை சகிக்கமுடியாமல் தன் வாழ்க்கையை முடித்துக்கொள்ள சிலர் முயற்சிக்கிறார்கள். **கணவன்-மனைவி** வாழ்க்கையில் ஒருவர் பலவீனத்தை, பழக்க வழக்கங்களை,சுபாவங்களை அங்கீகரிக்க முடியாமல்போனால் ஒன்று **விவாகரத்து**, அடுத்தது **தற்கொலை. குடி,போதை** வஸ்துக்களுக்கு அடிமையாவது அதிலிருந்து விடுதலை பெற முடியாத

நிலைவரும்போது வாழ்க்கையை முடித்துக்கொள்வது. இப்படி பல பலவீனங்களின் காரணத்தால் தற்கொலை செய்து கொள்பவர் எண்ணிக்கை பெருகுகிறது. இதிலிருந்து விடுதலை பெற ஒரே ஒரு வழி. இயேசுகிறிஸ்து மட்டுமே!. அவர் **உன்னை மாற்றுகிறவர், விடுவிக்கிறவர், மனுஷன், பணம், சொத்து, மனைவி,கணவன்,பிள்ளைகள் தராத சமாதானம் இயேசு கிறிஸ்துவிடம் மட்டுமே உண்டு.**

**கிறிஸ்துவின் ஆவி எங்கேயோ அங்கு விடுதலை உண்டு.** 2 கொரி 3:17.

**என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு.** பிலி 4:13.

vvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvvv

# ONLINE BANKING

காணிக்கையை மணிடிரான்ஸ்பர்(NET Transfer) வழியாக அனுப்ப விரும்புகிறவர்களுக்கு என்னுடைய வங்கி தகவல்கள்:

**A/c Name : Dr. M.G.E.PUSHPARAJ**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப (**Overseas Doners):**

**1). Bank Name : State Bank of India - Srirangapalayam Branch - SALEM -1970**
**A/c No. 10764116842,**
**Swift code: SBININBB637**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப **(India Doners):**
**IFSC CODE : SBIN0001970- A/c No.10764116842**

2) **Bank Name: CANARA BANK, (Suramangalam Branch) - 1219**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப(**Overseas Doners):**
**SWIFT CODE: CNRBINBBSLM - A/c No. 1219101013622**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப**India Doners:**
**IFSC CODE : CNRB0001219 - A/c No. 1219101013622,**
**MICR CODE: 636015005.**

செக்(Cheque), டிடி(DD) மற்றும் மணியாடர் வழியாக காணிக்கை அனுப்ப தொடர்புக் கொள்ளவேண்டிய என்னுடைய முகவரி:

Dr.M.G.E.PUSHPARAJ
SALEM - 636005

# தற்கொலையை நோக்கி பயணித்தவனுடன் உரையாடல் (கற்பனை உரையாடல்)

Bro. R.S.JACOB

மனிதன் : **நான் தற்கொலை செய்துக்கொள்ளப்போகிறேன் என்னைத் தடுக்கவேண்டாம்**

தேவன் : நீ தற்கொலை செய்துக்கொள்ளக்கூடாது. நீ வாழவேண்டியவன்.

மனிதன் : **என்னை நேசிப்பார் யாருமில்லை (அழுது புலம்புகிறான்)**

தேவன் : அநாதி சினோகத்தால் நான் உன்னை சிநேகித்தேன்.

மனிதன் : **எனக்கு ரொம்பப் பயமாக இருக்கிறது (எரோ 31:3)**

தேவன் : பயமுள்ள ஆவியை கடவுள் நமக்குக் கொடுக்கவில்லையே(2தீமோ 1-7)

மனிதன் : **எனக்கு ஒன்றும் ஓடவில்லை. எதுவும் செய்ய முடியவில்லை.**

தேவன் : என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்யமுடியும்.

மனிதன் : **கவலைகளால் நொந்துபோனேன். என்ன செய்வது?**

தேவன் : அவர் உங்களை விசாரிக்கிறவரானப்படியால் உங்கள் கவலைகளை அவர்மேல் வைத்துவிடுங்கள். (1பேது 5:7)

மனிதன் : **எனக்கு உதவி செய்வார் யாருமில்லை. அழுதான்**

தேவன் : ஆபத்துகாலத்தில் என்னை நோக்கிக்கூப்பிடு,நான் உன்னை விடுப்விபேன்.சங் 50:15

மனிதன் : **இதெல்லாம் என்னால் இயலாது நான் பலவீனன்.**

தேவன் : மனுஷனால் கூடாதவைகள் தேவனால் கூடும். லூக் 18:27.

மனிதன் : **என் உள்ளம் சிதைந்து நான் சோர்ந்து போயிருக்கிறேன்.**

தேவன் : நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று வேதத்தில் வாசிக்கவில்லையா? மத் 11:29.

மனிதன் : **என்னால் முன்னேறவே முடியவில்லையே (ஏங்கி அழுதான்)**

தேவன் : என் கிருபை உனக்குப்போதும் என்று கர்த்தர் கூறியிருக்கிறாரே(2கொரி12:9)

மனிதன் : **என் தேவைகளை நிறைவு செய்யமுடியவில்லையே**

தேவன் : என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் நிறை வாக்குவார். பிலி 4:19.

மனிதன் : **நான் ஒரு அநாதையைப்போல் அலைகிறேன்.**

தேவன் : என் தகப்பனும்,என் தாயும் என்னைக் கைவிட்டாலும் கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்வார் என்று வேதம் சொல்கிறதே. சங் 27:10.

மனிதன் : **நான் மதியற்றவன் என்று மற்றவர்கள் ஏளனம் செய்கிறார்கள்.**

தேவன் : ஐசுவரியத்தையும், சம்பத்தையும்,கனத்தையும் உனக்குத் தருவேன் என்று கர்த்தர் கூறுகிறார். 2நாளா 1:12.

மனிதன் : **நான் ஒரு மா பாவி, எனக்கு மன்னிப்பு கிடைக்குமா?**

தேவன் : பாவங்களை மன்னித்து எல்லா அநியாத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது. 1 போ 1:9.

மனிதன் : **மரண பயம் என்னை சூழ்ந்து கலக்குகிறது.**

தேவன் :நானே உயிர்தெழுதலும்,ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

# என் கிருபை உனக்குப் போதும்

( 2 கொரிந்தியர் 12 : 9)

Bro. EMIL JABASINGH

**என் கிருபை உனக்குப் போதும் என்பது என்ன?**

பரிசுத்த பவுலுக்கு கர்த்தரிடத்திலிருந்து கிடைப்பதில்தான் என் கிருபை உனக்கு போதும் என்பதாகும். இருந்துவரும் பதிலாகும். அவருக்கு ஓர் பலவீனம் இருந்ததாகவும், அந்தப் பலவீனம் சாத்தானிடமிருந்து நேரடியாக வந்ததாகவும், அது அவரை குட்டுவதாகவும், அது அவரின் ஊழியத்தின் வேகத்திற்கு தடையாக இருப்பதாகவும், கர்த்தர் உடனடியாக அதை அப்புறப்படுத்தவேண்டும் என்றும் அவர் எதிர்ப்பார்ப்பதை 2 கொரிந்தியர் 12:9-9 வசனங்களில் கூறுகிறார். அதே அதிகாரத்தில் 2ம் வசனத்தில் 14 வருடங்களுக்குமுன் கண்ட தரிசனத்தையும் கூறுகிறார். அநேக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறபடி, 14 வருடங்களுக்குமுன் அவர் எழுதிய நிருபம் **கலாத்தியர்** நிரூபம் ஆகும். அந்த நிருபத்தில் தனக்கு இருந்த பலவீனத்தை சற்று தெரியப்படுத்துகிறார்.

**"என் சரீரத்தில் உண்டாயிருக்கிற சோதனையை நீங்கள் அசட்டை பண்ணாமலும், அரோசியாமலும் என்னை ஒரு தேவதூதனை போலவும்,கிறிஸ்து இயேசுவை போலவும், என்னை ஏற்றுக்கொண்டீர்கள்"** (கலாத்தியர் 4:14) என்று கூறுகிறார்.

14 வருடங்களுக்கு முன்னர் தான் ஜெபித்த ஜெபத்தையும், அதற்கு கிடைத்த பதிலையும் 2 கொரிந்தியர் 12: 7 -9 வசனங்களில் எழுதுகிறார்

ஜெபம் **: என் பலவீனம் என்னை விட்டு நீங்கட்டும் !**

பதில் **: என் கிருபை உனக்கு போதும்** !

"தேவனின் கிருபை" என்பது என்ன? கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவே!** அந்த கிருபையாகும். அப்படியானால் பவுலுக்கு கிடைத்த பதில் என்ன? **இயேசு கிறிஸ்து** உனக்கு போதும் என்பதாகும் !

உன் பாவங்கள் நடுவிலும், உடல் பெலவீனங்கள் நடுவிலும் **தமஸ்குவின்** பாதையில் உன்னை நான் கண்டுபிடித்து அழைத்த **நான் உனக்கு போதும் !**

பழைய பெலவீனங்கள் மாறவில்லை - பிரவேசிக்க போவதோ **ஓர் புதிய வருடம்.**
பழைய பிரச்சனைகளும் தொடரும் தேவைகளும் சந்திக்க போவதோ **ஓர் புதிய வருடம் !**

பழைய வேலைகள் பளுக்கள் நெருக்கடிகள் ஆகியவைகள் தொடர்ந்த வருமோ? **ஓர் புதிய வருடம் !**

அதே மனிதர்கள் அதே குடும்பம் அதே முகங்கள் ஆனால் **புதிய வருடம் !**

புதிய வருடத்தில் நமக்கு **புதிய ஆசீர்வாதங்கள்** தேவையா ? அல்லது **பெரிய ஆசீர்வாதம் தேவையா?** என்பதே கேள்வி?.

பரி. பவுல் பெற்றது **புதிய சுகம்** அல்ல **பெரிய சுகம்** !

"மகா பிரதான **அப்போஸ்தலருக்கும்** நான் எவ்வளவும் குறைந்தவனாய் இருக்கவில்லை." வசனம் 11 ஆனால் **அதே பெலவீனம்** என்னை தொடர்ந்து ஆனால் **மகா பெரிய ஆசீர்வாதம்** எனக்கு கிடைத்தது அது **மகா பிரதான அப்போஸ்தலருக்கு சமம்** !

அதே **பெலவீனம்** ஆனால் பவுலிடமிருந்து நமக்கு **"என்னை போல் ஆகுங்கள்"** (கலாத்தியர் 4:12) என்ற அழைப்பு வருகிறது !

**அதே பெலவீனம் மாறவில்லை ஆனால் உலகத்தில் வாழும்போதே யாருக்கும் கிடைக்காத அனுபவம் மூன்றாவது வானம் மட்டும் செல்லும் பாக்கியம் கிடைத்தது.** (2கொரி12:2)

எத்தனை பெரிய கிருபையான பாக்கியம் இது. அதே பெலவீனம தொடருகிறது, ஆனால் **"என்னை பெலப்படுத்துற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு."** (பிலிப் 4:13) எனறு கூறும் திடநம்பிக்கை!

**இயேசுவின் மேல்** வைத்த **பவுலில்** விசுவாசம் **அவரது பெலவீனத்தைவிட** பன்மடங்கு பெரிதானது ! எனவே அவர் பெற்றுக்கொண்டது **சிறிய ஆசீர்வாதம் அல்ல**, அவ்வப்போது கிடைக்கும் **புதிய ஆசீர்வாதங்களும் அல்ல,**

பவுல் பெற்றது **பெரிய ஆசீர்வாதம்** ஆகும் !

**புதிய ஆசீர்வாதம்-** நமக்கு தேவையானது எது என்று தேவனுக்கு அறியப்படுத்துவது

**பெரிய ஆசீர்வாதம்** -உனக்கு தேவையானது எது என்று **நமக்காக** தேவனே தீர்மானிப்பது!

**பெரிய ஆசீர்வாதத்தில்** புதிய புதிய ஆசீர்வாதங்கள் அனைத்தும் அடங்கியிருக்கிறது. புதிய **புதிய வழிநடத்துதல்கள்,** வல்லமைகள், **கதவுகள்திறப்பது,** வாய்ப்புகள், சுதந்திரங்கள், சுகங்கள், வரவுகள் நல்நிகழ்ச்சிகள், மனமகிழ்ச்சிகள், துதிகள், ஸ்தோத்திரங்கள் அனைத்தும் அதில் அடங்கும்.

**பெரிய ஆசீர்வாதம்** கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் அடங்கியிருக்கின்றன !

**புதிய வருடம்** புதிய ஆசீர்வாதம் அல்ல **பெரிய ஆசீர்வாதம்தான் உனக்கு வேண்டும்.** என் கிருபை உனக்கு போதும் என்றால் **இயேசு கிறிஸ்து** எனக்கு போதும் என்பதுதான் அதன் அர்த்தம் !

உன் தனிப்பட்ட வாழ்விலே **என் கிருபை** உனக்கு போதும் !

கோனலும் மாறுபாடும் நிறைந்த இந்த உலகத்திலே நீ இடதுபுறமோ வலதுபுறமோ விலகி பின் **விழுந்துவிடாதபடிக்கு** பாசி நிறைந்த பாதையில் உன் கண் அங்கும் இங்கும் பார்ப்பதினால் நீ **வழுக்கி விழுந்துவிடாதபடிக்கு புதிய வருடத்தின்** 365 நாட்களும் **இருதயத்தில் சுத்தம்** உள்ளவராக, 24 நேரமும் **தேவனை தரிசிக்கிறவராக** வெற்றியின் வாழ்வை வாழ்வதற்கு உனக்கு இயேசு கிறிஸ்து போதும் !

நோவாவின் நாட்களில் நடந்தது போன்று லோத்தின் நாட்களில் நடந்தது போன்று ரோமர் முதல் அதிகாரம் கூறிவது போன்று அவபக்திக்கும், அநியாயத்திற்கும், சிருஷ்டியை வணங்குவதற்கும். சிருஷ்டி கர்த்தரை மறுதலிப்பதற்கும் காம விகாரங்களுக்கும் துணிகரமான பாவங்களுக்கும் இப்போதுள்ள இந்த உலகத்தின் மனிதர்கள் தங்களை விற்றுபோட்ட காலத்தில் **ஒரு யோசேப்பு** போன்று நீ வாழ்வதற்கு உனக்கு **இயேசு கிறிஸ்து** போதும்!

சத்தங்கள், சண்டைகள், பகைகள், பழிகள் என்ற பயங்கரமான இந்த உலகத்தில் அன்பு. சந்தோஷம். சமாதானம்கொண்டு வாழ்வதற்கும் வேகம், கோபம், எரிச்சல் என்ற உலகில் நீடிய பொருமை, தயவு, நற்குணம் பெற்று வாழ்வதற்கும் **உனக்கு இயேசு போதும்.** கடவுள் யார், கடவுள் எங்கே, ஜெபித்ததினால் பெற்றது என்ன ? வேதத்தை கையில் எடுப்பதினால் கண்டது என்ன? 21ம் நூற்றாண்டிற்கும், கடவுளுக்கும் சம்பந்தமே இல்லை என்று கூறும் உலக ஞானிகள் அவர்கள் தேவாதி தேவனை நிராகரிக்கும் இந்த உலகத்தில் நீ **வீர விசுவாசத்துடன்** வாழ்வதற்கு உனக்கு **இயேசு கிறிஸ்து** போதும்!

ஆடை, அலங்காரங்கள் நாகரீகங்கள், கண்களின் இச்சைகள், காம விகாரங்கள், அந்தரங்க பாவங்கள், மதுக்கள், **போதை மாத்திரைகள்,** ஓட்டங்கள், ஆட்டங்கள் என்று மாய்கைக்குள் விழுந்த இந்த உலகில் நீ **அடக்கத்துடன் வாழ்வதற்கு** உனக்கு **இயேசுகிறிஸ்து போதும்** ! உன் குடும்ப வாழ்க்கையில் கூட என் கிருபை போதும் என்றார் இயேசு !

**"நானும் என் வீட்டாருமோ என்றால் கர்த்தரையே சேவிப்போம்."** நீங்கள் எப்படி எங்களைப்பற்றி முடிவு செய்தாலும் அது எங்கள் குடும்பத்தின் விசுவாசத்தை பாதிக்கப்போவதே இல்லை!. இந்த உலகத்தில் அக்கம் பக்கத்தார் **குடும்ப** தெய்வம், **குல** தெய்வம் என்று எதை தெரிந்தெடுத்தாலும் அதை எப்படி மிகைப்படுத்தினாலும் **"நானும் என் வீட்டாருமோ என்றால் கர்த்தரையே சேவிப்போம்"** என்று நீ கூறுவதற்கும் அவர்கள் மத்தியில் சாட்சியாக நிற்பதற்கும் உனக்கு **இயேசு கிறிஸ்து போதும்** !

வாக்கு வாதங்கள், சந்தேகங்கள், சண்டைகள் என்று **திருமண வாழ்க்கையில் இணைந்தவர்கள் இரண்டாக** பிரியும் இப்போதைய புதிய கலாச்சார உலகத்தில் **தேவன் எங்களை இணைத்தார்,**கர்த்தர் **எங்கள் வீட்டை கட்டுகிறார, மனைவி** திராட்சை செடி,**பிள்ளைகள்** ஒலிவ மரக்கன்றுகள், எங்கள் பிரயாசங்களின்

**பலன் மிகுதி** என்று **நீயும் உன் மனைவி, பிள்ளைகளும்** இந்த உலகத்தில் கர்த்தரை துதிப்பதற்கு உனக்கு **இயேசுகிறிஸ்து** போதும் !

உன் கைகளின் பிரயாசங்களுக்கு **என் கிருபை போதும்** என்கிறார் இயேசு கிறிஸ்து !

விவசாயமோ, வியாபாரமோ, உத்தியோகமோ, உடல் உழைப்போ எதுவாயினும் **"ஈசாக்கு விதை விதைத்தான்: கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்:** அந்த வருஷத்தில் **நூறுமடங்கு பலன்** அடைந்தான்." (ஆதியாகமம் 26:12) என்பதுபோல் நீயும் உன் எல்லா உழைப்பிலும் ஆசீர்வாதம் பெறுவாய். **புதிய வருடத்தில்** நீ எடுக்கும் எல்லா பிரயாசங்களிலும், படிப்பிலும், தேர்வுகளிலும், முயற்சிகளிலும், முதலீடுகளிலும் உனக்கும், உன் மனைவி, பிள்ளைகளுக்கும் ஈசாக்கு பெற்ற அதே ஆசீர்வாதம் கிடைப்பதற்கும் **பெரிய ஆசீர்வாதத்தை** பெற்று, நீயும், உன்பெற்றோரும், உன் மனைவியும, உன் மனைவியின் பெற்றோரும், பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் சேர்ந்து காலையும் மாலையும் கர்த்தரை பாடி கீர்த்தனை பண்ணுவதற்கு இந்த உலகத்தில் உனக்கு **இயேசுகிறிஸ்து** போதும் !

உன் **ஊழியங்களுக்குகூட** என் கிருபை போதும் ! **என்கிறார் இயேசுகிறிஸ்து.**

நீ ஊழியத்தில் தூவும் விதைகள் யாவும் **வழியில்** அல்ல, **கல்மனங்களிலும்** அல்ல, **முட்களில்** நடுவிலும் அல்ல, **நல்ல நிலத்தில் விழும்** ! நீ **சிறுக** அல்ல, **பெருக** விதைத்து 30, 60, 100 என்று உன் அறுவடை **ஏறிக்கொண்டே** இருப்பதற்கும், சபைகளில் இரட்சிக்கப்பட்டவர்களின் தொகைகள் பெருகிகொண்டேயிருப்பதற்கும், **கால்மிதிக்கும்** நிலங்கள், உனக்கு சொந்தமாவதற்கும், கட்டும் ஆலயங்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டே போவதற்கும் இந்த உலகத்தில் **உன் ஊழிய ஸ்தலங்கள்** எங்கும் உனக்கு **இயேசுகிறிஸ்து** போதும்!

நீ கிராமம் தோறும் ஒரு **சமாதான பாத்திரம் பெற்று** அற்புத அடையாளங்கள் செய்து **பிசாசின் ஆவிகளை** விரட்டி **இருளில் இருப்பவர்களை** வெளிசத்தில் கொண்டுவர **மரண பயத்தில்** இருக்கிறவர்களை நித்திய ஜீவனின் நம்பிக்கைக்குள் கொண்டுவர, **உன்நிமித்தம்** ஜீவபுத்தகத்தில் ஆயிரக்கணக்கானவர்களின் **பெயர்கள்** பரலோகத்தில் **பதிவுசெய்யப்பட** அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் என்ற தேவைமிக்க இந்த உலகத்தில் உனக்கு **இயேசுகிறிஸ்து** போதும் !

இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம் என்று **பழைய வருடத்தை** பார்த்தும் கூறுகிறேன் !

இயேசுவே **நீர் எனக்கு போதும்** என்று **புதிய வருடத்தை பார்த்தும்** கூறுகிறேன் !

என் **குடும்பத்திற்கு** இயேசு போதும் என் **பொருளாதாரத்துக்கு** இயேசு போதும் !

என் **ஆரோக்கியத்திற்கு** இயேசு போதும் !

என் **சபைக்கு** இயேசு போதும் !

என் **ஊழியத்திற்கு** இயேசு போதும் !

என் **அழைப்பிற்கு** இயேசு போதும் ! இயேசு போதும் ! இயேசு போதும் !

என்று இரவும் பகலும் மனதிலும், இதயத்திலும், உதட்டிலும், உள்ளத்திலும், முழங்காலிலும் மற்ற நேரங்களிலும், தூங்கும் போதும் விழிக்கும்போதும் **சொல்லிக்கொண்டே இரு.** அப்பொழுது **உன் பெலவீனத்தில்** இயேசுவின் **பெலனை காண்பாய் !**

உன் !**தேவைகளில்** இயேசுவின் **நிறைவை** காண்பாய் !

உன் **கஷ்டங்களில்** இயேசுவின் **விடுதலையை** காண்பாய் !

உன் **துக்கங்களில்** இயேசுவின் **சந்தோஷத்தை** காண்பாய் !

உன் **வியாதிகளில்** இயேசுவின் **சுகத்தை** காண்பாய் !

உன் **எதிர்ப்புகளில்** இயேசுவின் **வெற்றியை** காண்பாய் !

உன் **முயற்சிகளில்** இயேசுவின் **ஆசீர்வாதங்களை** காண்பாய் !

உன் **பிள்ளைகளில்** இயேசுவின் **சமாதானத்தை** காண்பாய் !

என் **கிருபை** உனக்கு போதும். ஆம். இன்றும் என்றும் எனக்கு **இயேசு கிறிஸ்துபோதும்.** ஆமென்.

# ஓர் பிரார்த்தனை

கிருபையில் ஐஸ்வர்யம் உள்ள கர்த்தாவே ! கோபம்கொண்டாலும் இரக்கத்தை சிநேகிக்கிறவரே எத்தனை பிழை செய்திருந்தாலும் உம்மை நோக்கி பார்க்கிறவர்களுக்கு அவர்களின் தப்பிதங்களை **மன்னிக்கிறவரே.**

குற்றங்களுக்கு தக்கதாக **தண்டிக்காமல்** பாவங்களுக்கு ஏற்ப **சரிக்கட்டாமல்** மன்னித்து எங்களை **வாழ செய்கிறவரே** ! எங்கள் ஒவ்வொருவருக்கும் பழைய ஆண்டில் கொடுத்த **கிருபையை** புதிய ஆண்டில் **இரு மடங்கு** கூட்டித்தருமாறு கெஞ்சுகிறோம் கர்த்தாவே!

365 நாட்களும் **பரிசுத்த ஜீவியத்தில்** வளரும் கிருபையும் **முழங்காலில்** நிற்கும் கிருபையும் ஆத்துமாக்களை (சுகம்) தரிக்கும் கிருபை, சுகம், பெலன், பண வசதிகள் என்ற கிருபை, பிள்ளைகள் படிப்பு, வேலை, குடும்பபாக்கியங்கள் என்ற கிருபை.

**பிசாசை வெல்லும்** கிருபை, **ஆவியின் கனியை** ஆமல்படுத்தும் கிருபை, உலகத்தை ஜெயிக்கும் கிருபை, **விசுவாசத்தில்** வளரும் கிருபை, ஆகியவைகளை புதிய வருடத்தில் 365 நாட்களிலும் **உண்மையாய் ஜெபிக்கும்** ஒவ்வொருவருக்கும் தரவேண்டும் என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், **கிருபை நிறைந்த** அதே நாமத்தில் கெஞ்சுகிறோம், தந்தருளும்! கர்த்தாவே !

உம் கிருபை பெற்று இயேசுவே ! உம்மை துதிப்போம். ஸ்தோத்தரிப்போம். ஆமென்.

# தேவ கிருபை யாருக்கு உண்டு ?

## நான் எத்தனை நல்லவன், எத்தனை நல்லவன்,

**என் இதயத்தில் துளி விஷம் கூட இல்லை, வாயில் ஒரு பொய்கூட இல்லை, செயல்களில் நான் தவறுவதே இல்லை** என்பவர்கள் கர்த்தருக்குமுன் **கடும் குற்றவாளிகள்** என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது.

2 பேர் தேவாலயம் சென்றார்கள். இருவரும் கிருபைக்காகவே ஜெபித்தார்கள். ஒருவன் தான் எத்தனை கெட்டிக்காரன் என்று கர்த்தருக்கு தன் ஆவிக்குரிய சாமார்த்தியங்களை படித்து படித்து காட்டினான்! மற்றவன் குனிந்த தலையுடன், உடைந்த மனதுடன் ஆண்டவரே, **"நான் ஒரு பாவி"** என்றான். கர்த்தர் **தன்னை மிகைப்படுத்தியவரை** வெறுமையாக திரும்ப செய்தார்! **தன்னை தாழ்த்தியவரை** தேவ கிருபையுடன் போகச் செய்தார் !

தேவ கிருபை யாருக்கு உண்டு ? **தங்களை தாழ்த்தும்** அனைவரும் உண்டு! இயேசுவின் நாமத்தில் உண்டு !

## லண்டன் மிஷன் சபை கன்வென்ஷன் - பாகோடு (கன்னியாகுமரி மாவட்டம்)






கன்னியாகுமரி மாவட்டம் **பாகோடு என்ற இடத்தில்** 3 நாள் கூட்டங்கள் மிக ஆசீர்வாதத்துடன் நடந்தேறின. சபை ஆயர்.**Rev.Ranjith Mony** அவர்களுடன், சபை பொருப்பாளர்கள் கூட்ட ஏற்பாடுகளையும்,விளம்பரங்களையும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். கூட்டத்தில் கலந்துக்கொண்ட மக்கள் அனைவரும் பிரசங்கத்தை கேட்ட விதம் அவர்களுக்குள் வசனத்தை அறியும் தாகம் அதிகம் உண்டென்பதை காட்டியது. இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட்டது.

# கேள்வி - பதில்

# கிறிஸ்து எப்போது பிறந்தார்.

**புதிய ஏற்பாட்டு சபைக்கு எந்த பண்டிகையும் செய்ய உத்தரவு இல்லை.**

டிசம்பர் 25ம் தேதி இயேசுகிறிஸ்து பிறந்ததையும், அதை கொண்டாடவேண்டும் என்பதையும் இன்றைய போதனையாக உள்ளது. இயேசு 30 வயதில் ஞானஸ்நானம் எடுத்து 3 1/2 வருடம் ஊழியம் செய்து **33 1/2 வயதில்** அதாவது இன்றைய காலண்டர்படி **ஏப்ரல்** மாதம் **மரித்தார்.** இதைத்தான் நாம் Good Friday என்று கூறுகிறோம்.

ஆனால் அவர் **மரிப்பதற்கு 6 மாதத்திற்**கு முன்பு தான் அவருக்கு **33வது பிறந்த நாள் வந்திருக்கும். அது ஏப்ரல் மாதத்திலிருந்து** பின்நோக்கிசென்றால் **அக்டோபர் மாதம்** 33வது பிறந்தநாள் வருகிறது. இயேசு பிறந்த மாதம் **அக்டோபராய்** இருக்க இயேசு பிறந்த மாதமாக **டிசம்பர் மாதம் எப்படி வந்தது**? இயேசு **கிறிஸ்துவின் பிறந்த நாளை யாரும் கொண்டாடக்கூடாது** என்பதற்காக தேவனே **அவர் பிறந்த நாளை** இரகசியமாக வைத்துவிட்டார். **அப்போஸ்தலர்களும் இயேசு பிறந்தநாளை கொண்டாடவில்லை.** ஆனால் இன்று கிறிஸ்துமஸ் என்ற பண்டிகை **அதிமுக்கியம்** என்ற போதனை வந்தது.

■ **புது வருடம் எது?: வேதத்தில் தேவன் கொடுத்த** வருடபிறப்பு **அபிப் மாதம்.** இது இப்போதுள்ள நமது காலண்டரில் உள்ளபடி **அபீப் மாதம் என்பது மார்ச்-ஏப்ரல்** மாதத்தில் வருகிறது. ஆனால் காலத்தையும் பிரமாணத்தையும் மாற்ற நினைப்பவன் வந்து ஜனவரி மாதம் **தான்** இனி வருடப்பிறப்பாக இருக்கவேண்டும் என்று மாற்றினான். ஆனால் அப்படி செய்யாமல் ஏப்ரல் மாதத்தில் வரும் **ஆபிப்** மாதத்தை வருடப்பிறப்பாக யூதர்கள் அனுசரித்தார்கள். யூதர்கள் கொண்டாடிய ஏப்ரல் மாதத்தை **முட்டாள்மாதம்** என்று கூறுவது இன்றுவரை வழக்கத்தில் உள்ளது.

இப்படியிருக்க **ஜனவரி** மாதம் முதல் தேதியை தேவன் கொடுத்த **வருடபிறப்பு** என்று எப்படி கூறமுடியும். **ரோம ராஜாவின்** பிறந்த நாளை **வருடப்பிறப்பாக** மாற்றப்பட்டதாக வரலாற்றில் கூறப்பட்டுள்ளதாம். அந்த ராஜாவின் பிறந்தநாளையே நாம் **புதுவருடம் என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.** இதில் இப்போது புதிதாக வாக்குதத்த அட்டை என்று கூறி வழங்குகிறோம். **இதுவா வருட பிறப்பு ?** இதை கட்டாயம் செய்ய வேண்டும் என்பதை (இந்த கட்டுரையை எழுதும் ஆமோஸ் என்ற) என்னால் ஏற்க முடியவில்லை. ஜெபம் செய்து **ஆயுத பூஜை** கொண்டாடுவோம், **பொங்கல் கொண்டாடுவோ**ம் என்றும் (சகோ.மோகன் சி.லாசரஸ் போன்ற)

சிலர் கூறியும், செய்தும் வருகின்றனர். அதற்காக வருந்துகிறேன்.

■ **சிலுவையை வணங்கலாமா? :** இன்று அநேக சபைகளில் **சிலுவையை** கடவுளாக வணங்குகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் **உருவப்படம்** என்று ஒன்றை வீடுகளில் வைத்தும் சபைகளில் வைத்தும் வணங்குகிறார்கள். இப்போதுள்ள இயேசுவின் படம் **ஐரோப்பிய நாட்டை** சேர்ந்த ஒருவரின் முகம். நம் இயேசுகிறிஸ்து ஆசியாவை சேர்ந்தவர். **சாம், காம்.** யாபேத் **2ம் உலகத்தின் தகப்பன்மார்கள்.** இதில் **காம்** சபிக்கப்பட்டவன். அவன் வாழ்ந்த இடம் **ஆப்பிரிக்க கண்டம்.** யாபேத் **ஐரோப்பா கண்டம்.** சேம் **ஆசியா கண்டம்** என பிரிக்கப்பட்டது. ஆபிரகாம் சேமின் வம்சம். **ஆபிரகாம் வம்சத்தை சேர்ந்தவர்தான் இயேசு கிறிஸ்து.** இஸ்ரேல் **ஆசியா கண்டம்,** எல்லாம் மதமும் உருவானது ஆசியா கண்டத்தில்தான். இவர்கள் தலைமுடியை நீளமாய் வைத்திருக்கமாட்டார்கள். காரணம், பவுல் அடிகளார் **ஆண்கள் தலைமுடியை நீளமாய்** வைத்திருக்க கூடாது என்று கூறியிருப்பது அவர் இயேசு கிறிஸ்துவினிடத்தில் கற்றுக்கொண்ட பாடமாகும். இந்த பிழையான இப்படத்தை தெய்வமாக இன்று சபைகள் வரைந்து வைத்துள்ளாதல் மகா பரிசுத்தமான பரிசுத்தம் நீக்கப்பட்டு **விக்கிரகமான இயேசு** படத்தை வணங்கும்படி ஆனது.

சபைகளை **சாத்தான் வஞ்ஜித்து**விட்டான். சபை என்ற ஒன்றுக்காக்தான் இயேசு கிறிஸ்து தன் உயிரை கொடுத்து உருவாக்கினார். அதுதான் இன்று சபைகள் என்று பல பெயர்களில் வளாந்தது. ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு விதமான போதனைகளை(டாக்டரின்) உபதேசங்களை விதைத்துவிட்டான் **ஏவாளை வஞ்ஜித்ததுபோல** இக்காலத்தில் **சபைகளும்** வஞ்ஜிக்கப்பட்டு கிடக்கிறது. 2 கொரி.

**"ஆகிலும் சர்பமானவன் தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்ஜித்தது போல உங்கள் மனதும் கிறிஸ்வைபற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோ"** என்று பயந்திருக்கிறேன் என்று அப்போஸ்தலன் கூறுகிறான். இது அப்படியே இன்று நிறைவேறியிருப்பதை நாம் நம் சபைகளிலேயே பார்க்கலாம். சபை போதனைகளைவிட்டு கிறிஸ்துவின் போதனையில் டாக்டரின் உபதேசத்தில் வளராத சபையில் மகா வேதத்தில் கூறியிருப்பதைவிட சுய போதனையே அதிகமாக இருக்கும்.

"**வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும்** கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலை வெளிச்சம் இல்லை. ஏசா 8:20

நாம் நினைப்பது அப்படியே வேதத்தின் அடிப்படையில் இருக்கவேண்டும். அதுதான் மகாபரிசுத்தமான விசுவாசம். **ஆத்மா சாகாது** என்று நினைக்கிறோம். ஆனால் **ஆத்துமா சாகும்** என்று உள்ளது. உதாரணமாக ஆதாம் 930 வருடம் வாழ்ந்தான். ஏன் அவன் ஆண்டவர்

சாப்பிடக்கூடாது என்று கட்டளையிட்ட பழத்தை சாப்பிட்ட நாளில் ஆதாம் சாகவில்லை என்றால் அவன் ஆவியில் மரித்தான் என்கிறோம். ஆவி சாகுமா? என்றால் **ஆத்துமாவில் மரித்தான்** என்கிறோம். ஆனால் ஆதாம் சரித்திரத்தில் மரித்தது 930ம் வயதில் அதாவது அவனுடைய மாமிச மரணம் பற்றி மட்டுமே வேதத்தில் கூறப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து மரித்து மூன்று நாள் எங்கே இருந்தார் என்றால். **காவலில் உள்ள ஆவிகளுக்கு பிரசங்கித்தார்** என்று கூறுகிறோம். ஆனால் 1 பேதுரு 3:18,19ல் அவர் **உயிர்த்தெழுப்பட்ட பின் அந்த ஆவியிலே** அவர் போய் **காவலில் உள்ள ஆவிகளுக்கு** பிரசங்கித்தார் என்று உள்ளது.

நரகத்தின் வேதனை எப்படியிருக்கும் என்றால், எண்ணெய் சட்டியில் வறுப்பார்கள், தலைகாய்ந்து காதில் சூடான எண்ணெய் ஊற்றுவார்கள். இடுக்கியில் நாக்கை பிடுங்குவார்கள் கம்பியை பழுக்க காயவைத்து கண்களில் செருகுவார்கள். நித்திய நித்திய காலம் கொடுமைபடுத்துவார்கள் என்று இப்படிப்பட்ட மகா கற்பனை கதைகளை கூறுகிறார்கள். இப்படியெல்லாம் வேதத்தில் எங்கும் கூறவில்லை தேவன் **ஹிட்லரைவிட** கொடுமைக்காரரா? இல்லையே!.

சகோதர, சகோதரிகளே அவர் **அன்புள்ளவர்** என்றுதான் வேதத்தில் கூறியிருக்கிறது. அவருடைய **கோபம் ஒரு நிமிடம்** என்றுதான் வேதம் போதிக்கிறது. பிதா,குமாரன் பரிசுத்தாவியை நாம் விசுவாசிக்கவேண்டும். **அந்திகிறிஸ்து** என்றால் கிறிஸ்தவனாகவே இருந்துகொண்டும் கிறிஸ்தவ சபைகளில் பிரதான தலைவர்களாக இருந்துக்கொண்டும் தன்னை **முதன்மை படுத்திக்கொண்டும்** தன்னை **கிறிஸ்துவின் ஊழியர்** என்று சொல்லிக்கொண்டு **கிறிஸ்து கூறின போதனைகளுக்கு விரோதமான போதனையை** கூறுகிறவார்கள். **விரோதமான என்றால் வேதத்தில் இல்லாததை செய்யக்கூடாது** என்று தெய்வம் எச்சரித்தை செய்யும்படி விசுவாசிகளுக்கு கட்டளையிடுபவன்தான் அந்திகிறிஸ்து. **இதுதான் ஆசீர்வாதம்** என்று பொய் சொல்லுகிறவர்கள் விசுவாசிகளை கவர்வதற்காக விசுவாசிகள் செய்யும் குறைகளை, தவறுகளை, சுட்டிக்காட்டி திருத்தாமல் இருப்பார்கள். கண்டித்து உணர்த்தாமல் காலத்தை கடத்துகிறவர்கள் தான் **அந்திக்கிறிஸ்துவின் ஆட்கள்.** நம்முடைய தேவன் பிதாவாகிய **யெகோவா** என்றும் அவர் மகன் **இயேசுகிறிஸ்து** குமாரன் என்றும் வேதம் தெளிவாக கூறியிருக்க **இயேசுதான் பிதா** என்று கூறி **இயேசுவை மட்டும்** தெய்வமாக ஆராதிக்க சில சபையின் போதனை கூறுகிறது. ஆனால் வேதமோ **அந்திக்கிறிஸ்து யார்?** என்று தெளிவாய் கூறுகிறது.

"**கிறிஸ்துவின் உபதேசத்திலே** நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவன் அல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ **பிதாவையும், குமாரனையும்** உடையவன்." 2 யோ. 9.

வெளிப்படுத்தல் புத்தகத்திலே "**அவனுடைய இலக்குமனித இலக்காய் இருக்கிறது**" என்று கூறியிருக்க இன்று **கம்யூட்டர்தான்** அந்திக்கிறிஸ்து என்றும், **பார்கோடுதான் அந்திக்கிறிஸ்து** என்றும், **ஆதார்கார்டு** அந்திக்கிறிஸ்து என்றும், **மெமரிசிப்** அந்திக்கிறிஸ்து என்றும் நம்பிக்கொண்டு இருக்கிறோம்.

இவைகள் அனைத்தும் மனித இலக்கு(நெம்பர்) அல்லவே. (666) இவைகள் யாவும் உலக சம்பந்தமானது. இவைகள் பெயர் கிறிஸ்தவர்களுக்கும் உலகத்தாருக்கும் பொருந்தும். ஆனால் அந்தி கிறிஸ்து **பரிசுத்தவான்களை ஒடுக்குவான்** என்று தேவனே கூறியிருக்கிறார்.

இப்படியிருக்க நாம் **எந்த உபதேசத்தை நம்புகிறோமோ,** எதையெல்லாம் விசுவாசிக்கிறோமோ **அது அப்படியே வேதத்தில் இருக்கவேண்டும்.** இதில் அந்திக்கிறிஸ்து வருவான் என்று சிலர் நம்புகின்றனர். ஆனால் யோவான் புத்தகத்தில் "**அநேக அந்தி க்கிறிஸ்து**" என்று பன்மையில் எழுதப்பட உள்ளது.

சபை பெரிதாக வளர்ந்தபோது **கிளைகளில்** ஆகாயத்து பறவைகள் மூலம் விழும் எச்சத்தை அசுத்தமும், அருவருப்புமான துர்போதனைகள் சாத்தானின் தந்திரங்களினால் துர் போதனைகள் சபைக்குள் நுழைந்து **சபையை -சபைகளாக மாற்றியது.**

அதனால் சபை மகா பரிசுத்தமான விசுவாசம் காணப்படாமல் போனது. 3 படி மாவில் புளித்த மாவு கலந்து முழுமாவும் புளித்தமாவானது. பரிசேயர் சதுசேயரின் துர் உபதேசத்தை புளித்தமா என்று கூறப்படுவதுண்டு. அதாவது **வேதத்தில் இல்லாத உபதேசம் என்று அதை அர்த்தப்படுத்தலாம்.**

புளித்தமாவாகிய வேதத்தில் இல்லாத உபதேசமாகிய **சாத்தானின் உபதேசம் என்பது வேதத்தில் இருப்பதை மாற்றி கூறுவது.** மேற்கண்ட காரியங்கள் அனைத்தும் வேதத்தில் இருப்பதை மாற்றி கூறுவதாகும். **இதை செய்கிறவன் சாத்தான்** என்பதை நாம் உணரவேண்டும். எதையும் சாதிப்பதைபோல நாம் பேசாமல் நடுநிலையில் இருந்து வேதத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

வேதத்தை ஆராய்ந்து பார்த்தால்தான் **நித்திய ஜீவன்** நமக்கு உண்டு என்று இயேசுவே கூறியிருக்கிறார்.

**தீமையை** நன்மை என்றும் **நன்மையை** தீமை என்றும் சொல்லி இருளை வெளிச்சமும். **வெளிச்சத்தை** இருளுமாக பாவித்து, **கசப்பை தித்திப்பும் தித்திப்பை கசப்பு** என்றும் சாதிக்கிறவர்களுக்கு ஐயோ. ஏசா. 5:20.

***அன்பு சகோதர, சகோதரிகளே!***

உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்த ஆவிக்குள் உங்களை உறுதிபடுத்திக்கொண்டு பரிசுத்தஆவிக்குள் ஜெபம் செய்யவேண்டியது அவசியமாக உள்ளது. **மகா பரிசுத்தமான விசுவாசம்** என்பது நாம் விசுவாசிப்பதையும் நம்புவதும் அது **பரிசுத்த வேதத்தில்** அதாவது விவிலியத்தில் இருக்க வேண்டும். அப்படி இருக்கிறதா? என்று வேதம் வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நாம் பகுத்தறிவு உள்ளவர்களாய் இருக்கவேண்டும். (யூதா 22, ரோமர் 12:2, எபிரேயர் 5:14) **சாத்தானின் தந்திரத்தை** அறிந்து வேதத்தில் **இருப்பதை மட்டும் பிரசங்கிக்க வேண்டும், வேதம் கூறுவதைமட்டும் நம்பவேண்டும்** நமக்கு **தெளிந்த புத்தியுள்ள ஆவி** வேண்டுமென்று ஜெபிக்கவேண்டும். மகா பரிசுத்தமாக விசுவாசம் என்பது **புதையலை தேடுகிறதுபோல தேடினால்** மட்டுமே கண்டடைய முடியும். இதற்கு **ஒரே வழி வேதத்தை** ஆராய்ந்து பார்ப்பது, வேதத்தை நேசிக்கிறவர்களை நாம் உருவாக்குவோம். இன்று ஏராளமான **வேத பாட கல்லூரிகள்** உள்ளன. அவைகளில் **நாங்கள் போதிக்கும் போதனை** இதுவே என்று கூறி **அவரவர்களுடைய சபை கொள்கைகளையும்** கோட்பாடுகளையும் போதித்து அதன்படி வேத பாட கல்லூரி மாணவர்களை செயல்பட நிர்பந்திக்கிறார்கள்.

**சபை கொள்கையின்** அடிப்பபடையில்தான் இன்று எல்லா **வேதபாட கல்லூரிகள்** உள்ளன. உதாரணமாக RC,CSI,பெந்தேகோஸ்தே, செவன்த்டே, எகோவா விட்னஸ். வேத மாணாக்கர்கள், கிறிஸ்துவின் சபை, பிரதரின் சபை, லூத்தரன் சபை, மெத்தடிஸ்ட் சபை, பேப்டிஸ்ட் சபை ஆகிய சபைகளுக்கு அவரவர் உபதேசத்தை கற்பிக்கும் வேத பாட கல்லூரிகள் உள்ளன. இங்கே போதனைகள் யாவும் அவரவர் **சபையை பற்றியே** உள்ளது. **வேதத்தை மட்டும் போதிக்கிற கல்லூரிகள் என்று இல்லை.** ஒன்று இரண்டு கல்லூரிகள் மட்டும் ஒரு சில இடத்தில் உண்டு. சபை பாகுபாடு இல்லாமல் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க விரும்பும் பகுத்தறிவாளர்கள். ஒன்று கூடி வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்.

# முக்கிய அறிவிப்பு

**டாக்டர். புஷ்பராஜ் (ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு வாட்ஸ்அப், பேஸ்புக் எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக் குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் அந்த வாட்ஸ்அப், பேஸ்புக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன். அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன்.**

**- டாக்டர் புஷ்பராஜ்**

# பரிசுத்த ஆவியின் அபிஷேகம்

**அபிஷேகம் செய்யப்பட்டீர்களா?** என்ற கேள்வி பிழையானது. அப்படி கேள்வி கேட்பவர்கள் யாரும் வேதம் அறியாதவர்கள் ஆகும்.

விசுவாசிகளின் **ஆவியின் அபிஷேகம்** சம்மந்தமாக புதிய ஏற்பாட்டில் மொத்தம் 3 வசனங்களில் மட்டுமே விவரங்கள் கூறப்பட்டுள்ளது . எனவே நாம் கொடுக்கும் விளக்கங்கள் எதுவாயினும் இம்முன்று வசனங்களுக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் அவ்விளக்கங்கள் தவறானவைகள் என்றும் வேத வசனங்களுக்கு முரண்பட்டது என்றும் தெரிந்துக்கொள்ள வேண்டும். புதியேற்பாட்டு பக்தர்கள் **பவுல், பர்னபா, பேதுரு, யாக்கோபு** போன்ற எவரேனும் **தனிப்பட்ட முறையில் அபிஷேகம்** பெற்றதாக வசனங்கள் வேதத்தில் இல்லையென்பதை தெளிவாக அறிந்திருக்க வேண்டும். மேலும் புதிய ஏற்பாட்டில் எவராவது யாரையாவது பார்த்து **நீங்கள் ஆவியின் அபிஷேகத்தை பெற்றீர்களா என்று கேட்கவும் இல்லை, பெற்றுக்கொள்ளுங்கள் என்ற சொன்னதாகவும் இல்லை.** அப்படியானால் இதற்கு விளக்கம் தான் என்ன?

இக்கேள்வி உயிரோடு இருக்கும் ஒருவரை பார்த்து **நீ உயிரோடு இருக்கிறாயா?** என்று கேட்பதை போலாகும். விசுவாசிகள் எனப்படுபவர் எல்லாரும் அபிஷேகம் பெற்றவர்கள் என்பது தான் உண்மை. 2 கொரி 1:21 ல் உங்களோடுகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி **நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே** என்று கூறியிருப்பதால் இதை புரிந்துக்கொள்ளலாம் அல்லவா. மேலும் அவர் நம்மை முத்தரித்து **ஆவியென்னும் அச்சாரத்தையும்** கொடுத்து இருக்கிறார் என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு நம்முடைய இரட்சிப்பின் சுவிசேஷம் ஆகிய சத்தியவசனத்தை கேட்டு விசுவாசிகள் ஆனபோது வாக்குதத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் முத்திரை போடப்பட்டீர்கள். எபே 1:13 எனவே நாம் விசுவாசிகள் ஆனபோதே அபிஷேகம் பண்ணப்பட்டும் முத்திரை போடப்பட்டும் இருக்கிறோம் என்பது தெளிவாகிறது 1 யோ 1:20 ல் நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள் என்று கூறப்பட்டுள்ளது.1யோ 1:27 ல் நீங்கள் அவராலே பெற்ற **அபிஷேகம்** உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவனும் உங்களுக்கு போதிக்க வேண்டுவதில்லை அந்த **அபிஷேகம்** சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது அது சத்தியமாயிருக்கிறது. பொய் அல்ல. அது உங்களுக்கு போதிக்கிறப்படியே **அவரில் நிலைத்திருப்பீர்களாக** என்றும் காணலாம். எனவே **இம்மூன்று**

வசனங்களிலும் எல்லா விசுவாசிகளும் அவர்கள் இரட்சிக்கப்பட்ட அதே வேளையில் பரிசுத்த **ஆவியினால் முத்திரை** போடப்பட்டும் **அபிஷேகம்** பண்ணப்பட்டும் இருக்கீறார்கள் என்பதனை தெளிவாய் அறிந்துக்கொள்ளலாம்.

இந்த அபிஷேகத்தை நாம் எப்படி பெற்றுக்கொண்டோம் என்பதனை அறிய 133 ம் சங்கீதத்தை படிக்கவேண்டும் அதில் 2 ம் வசனத்தில் அது அரோனுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு அவனுடைய தாடியில் வடிகிறதும் அவனுடைய அங்கிகளில் இருக்கிறதுமான நல்ல தைலத்துக்கும் எர்மோன், மேலும் சியோன் பர்வதங்கள், மேலும் இரங்கும் பனிக்கும் ஒப்பாய் இருக்கிறது. யாத் 29: 7 ல் பிரதான ஆசாரியனாகிய ஆரோனின் சிரசில் அபிஷேக தைலத்தை வார்க்கும்படி கட்டளை கொடுக்கப்பட்டது. அப்படி அவர் சிரசின் மேல் வார்க்கப்பட்ட அபிஷேக தைலம் அவன் தாடிகளின் வடிந்து அங்கிகளின் மேல் இரங்குவதாய் கூறப்பட்டுள்ளது.நம்முடைய பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். சங் 2:2 ஏசாயா 61:1 அப் 4:28 அப் 10:38 அந்த அபிஷேகம் அவருடைய **சரீரமாகிய சபை முழுவதற்கும்** இறங்கி வந்தது. ஆகவே அவருக்குள் நாம் இந்த அபிஷேகத்து பங்காளிகளானோம். சரீரமாகிய அவருடைய சபைக்கு அவரே தலையாயிருக்கிறார். எபே 1:23 அவரே **அபிஷேகம் பண்ணப்பட்டவர்** அதில் நாமும் பங்குப்பெற்றோம். இதுவே உண்மை.

## E-mail

ஜாமக்காரன் மாதம் வரவில்லை என்று சிலர் எழுதியிருக்கிறார்கள். நீங்கள் எழுதும் இமெயில் அல்லது கடிதத்தில் உங்கள் பழைய விலாசத்தையும் உங்களுக்கு கொடுக்கப்பட்ட நம்பரையும், தொலைபேசி எண்ணையும் எழுதினால் உங்கள் விலாசத்தை லட்சக்கனக்கான விலாச பட்டியலில் தேடும் நிலை ஏற்படாது. ஆகவே இனி எழுதுபவர்கள் எத்தனை முறை எனக்கு பழக்கமானவர்களாக இருந்தாலும் உங்கள் முழு விலாசத்தையும் மனதில் வைத்துக்கொள்ள முடியாது. உங்கள் புது விலாசத்தை தெளிவாக குறிப்பிடுங்கள். ஆகவே இந்த விஷயத்தில் உங்கள்ஒத்துழைப்பை நாடுகிறேன்.

புது விலாசம் எழுதி அறிவித்த e-mailக்கு அல்லது கடிதத்துக்கு உடனே பதிலும் கிடைக்கும். ஜாமகாரனும் தாமதிக்காமல் உங்கள் புது விலாசத்தில் அனுப்பிவைக்கப்படும்.

காணிக்கை விவரத்தை எழுதி அறிவிக்கிறவர்கள் உங்கள் தொலைபேசி எண்ணையும் மறக்காமல் குறிப்பிடுங்கள். காணிக்கை கிடைத்த விவரத்தை உங்களுக்கு தொலைப்பேசியில் உடனே அறிவிப்பேன்.

## சத்திய வசன வானொலி நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு வாரமும் **திங்கள், செவ்வாய்** ஆகிய இரு நாட்களில் Fபீபா வானொலியில் ஒலிப்பரப்பாகிறது. காலை 7-00 மணிக்கு மத்திய அலை வரிசையில் mw 873 khz மீட்டரில் ஒலிப்பரப்பாகிறது.

# பிரபல தொழிலதிபரின் தொழிற்சாலையின் சாட்சி






2017 ஜூன் மாதம் பாண்டிச்சேரியில் **திருபுவனை** என்ற இடத்தில் என் ஆவிக்குறிய கூட்டங்கள் நடந்தன. இந்தியாவின் மிக நவீன கருவிகள் கொண்ட மிக முக்கிய பொருள்கள் தயாரிக்கும் POPDIC Electronic Parkல் Sharon Solution Ltd., என்ற தொழிற்சாலையை நடத்திவரும் தொழிலதிபர் Mr.Kamalraj Johnson (Chairman-cum Managing Director) என்பவராகும். இவர் இரட்சிக்கப்பட்டு ஆத்துமபாரம் கொண்டு ஊழியங்களும் செய்கிறார். இவருக்கு உலகின் மிக முக்கிய நாடுகளிலும் **சிங்கப்பூர், ஹாங்காங்** போன்ற தொழிற்சாலைகள் உண்டு.

இவர் தொழிற்சாலையில் வேலைசெய்யும் நூற்றுக்கணக்கானவர் அத்தனைபேர்களும் உயர் படிப்பு படித்த இன்ஜினியர்கள் ஆவார்கள். இவர்களில் இந்து,முஸ்லீம் போன்ற பல மதத்தவர்களும் இங்கு பணியாற்றுகின்றனர். இவர்களுக்காக அடிக்கடி **ஆவிக்குரிய கூட்டங்கள்** நடத்தி இயேசுவை அறிவிப்பது இவரது முக்கிய பாரம். கம்பெனிக்குள் சாதாரண கூலியாட்களுக்கு வேளையில் வேலை செய்யும் அத்தனை பேரும் பெண்களும்,ஆண்களுமாக வாலிப வயதில் உள்ளவர்களாகும். கூட்டங்களில் வெளியாட்கள் கலந்துக்கொள்ள அனுமதியில்லை. அரசாங்கம் சம்பந்தப்பட்ட மிக முக்கிய பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையானதால் இங்கு இவ்வளவு கட்டுப்பாடு கொண்டதாகும். இங்கு 24 மணி நேரமும் வேலை நடக்கும். இந்த தொழில்சாலையில் தினசரி காலையும் மாலையும் வேத வசன வாசிப்பும்,தியானமும் உண்டு. ஒவ்வொரு ஞாயிறு காலையும் **விசேஷ ஆராதனையும், திருவிருந்தும்** நடத்தப்படுகிறது. இப்படிப்பட்ட ஏற்பாடு களையுடைய தொழிற்சாலையை என் 52 வருட ஊழியத்தில் கண்டதில்லை. நான்் பேசிய 3 நாட்கள் கூட்டங்களும் சிறப்பாக அமைந்தன.

தொழிலதிபர் **திரு. கமல்ராஜ்** அவர்களும் நல்ல பிரசங்கம் செய்யும் தாலந்து பெற்றவர். கர்த்தர் பல நாடுகளில் அவரை உபயோகப்படுத்துகிறார்.

நான் இவர்கள் தொழில் சாலையில் விசேஷ விருந்தினராக அழைக்கப்பட்டு இங்கு பணிபுரிபவர்களுக்கு ஊழியம் செய்தது புது அனுபவமாக இருந்தது.

சகோ.கமல்ராஜ் அவர்கள் சாதாரண குடும்பத்தில் பிறந்து தன் சொந்த முயற்சியால் **உலக தொழிலதிபராகவும், பெரும் செல்வந்தராக** இவர் இருந்தாலும் தாழ்மைஉள்ளவராகவும் தான் செல்லும் அல்லது பயணிக்கும் இடங்களிலெல்லாம் **இயேசுவை அறிவிக்கும்** வைராக்கியம் கொண்டவராகவும் இருப்பது மற்ற கிறிஸ்தவ தொழில் அதிபர்களுக்கும் செல்வந்தராகயிருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இவர் நல்ல முன்மாதிரியானவராக நான் உணர்த்தபட்டதால் இவ்விவரங்களை வாசகர்கள் அறிய தருகிறேன்.

காணிக்கை கொடுப்பதில் இவர் கரராராணவர். இவர் ஊழிய வாஞ்சை உள்ளவர் என்பதால் **பல சபை பாஸ்டர்கள்,ஊழியர்கள்,ஆலயம் கட்டவேண்டி பண உதவிபெறவும், பொருள் உதவி** பெறவும் இவரை நாடி வருகிறர்கள். அப்படி வருபவர்கள் உண்மையுள்ள ஊழியரா என்று கண்டறிவதில் நல்ல பகுத்தறியும் ஞானம்பெற்றவர். எளிதில் அவரை ஏமாற்றி அவரிடம் காணிக்கை வாங்கி செல்லமுடியாது. அதேசமயம் ஏராளமான சபைகளை **விளம்பரம் இல்லாமல்** கட்டிகொடுத்து, பல ஊழியர்களை தொடர்ந்து பணம் உதவிசெய்து தாங்கிவருகிறார். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

## சத்திய வசன தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

### சத்தியம் TV

சத்தியம் சேனலில் **வெள்ளிக்கிழமை** தோறும் காலை 5-30 மணிக்கு தற்போது நிகழ்ச்சி ஒளிப்பரப்பாகி வருகிறது.

### தமிழன் TV

சத்திய வசன தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் **திங்கள்தோறும்** காலை 6-30 மணிக்கு தமிழன் TVயில் ஒளிப்பரப்பாகி வருகின்றன.

### நம்பிக்கை TV

**ஞாயிறுதோறும்** நண்பகல் 12-30 மணிக்கு நம்பிக்கை TV சேனலில் சத்திய வசன திருமறை பாட நிகழ்ச்சி ஒளிப்பரப்பாகி வருகிறது.

## TWR TV நிகழ்ச்சிகள்

TWR ல் வரும் ஆழமான வேத பாட நிகழ்ச்சிகளை MK TV சேனலில் ஒவ்வொரு வாரமும் இரு நாட்களில் மட்டும் **புதன் வெள்ளிக்கிழமைகளில்** காலை 6-00 மணிமுதல் 6-30 மணிவரை காணலாம், கேட்கலாம்.

TWR நடத்தும் வேத பாடம் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை (MK TV சேனல்) Airtel No. 774 Videocon No. 558, Tata Sky No. 1563 கேபிள் TV களில் காணலாம்

## வானொலி நிகழ்ச்சிகள்

ஒவ்வொரு நாளும் அதாவது எல்லா நாட்களிலும் காலை 6-00 மணிக்கு Am 882 khz TWR வேத பாட நிகழ்ச்சிகளை கம்ப்யூட்டரில் பதிவு இறக்கம் செய்ய www.radio882.com. MP3 CD,SD Card ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரைஉள்ள வேத பாடத்தை காணலாம், கேட்கலாம்.

# CSI Coimbatore Diocese

## பாளபள்ளம் CSI Church கண்வென்ஷன்




தமிழ்நாட்டில் **ஈரோடு** அருகில் **பாலப்பள்ளம்** என்ற சிறு கிராமத்தில் நடந்த கூட்டம் மிகச்சிறப்பாக நடந்தது. லண்டன் மிஷனரிகள் இங்கு வந்து சுவிசேஷம் அறிவித்து முதல் ஆலய ம் கட்டிய இடங்களில் ஒன்றுதான் இது. இதன் சிறப்பு என்னவென்றால் ஊரின் பெயரில் **லண்டன் மிஷன் பாளபள்ளம் CSI ஆலயம்** என்ற பெயர் அரசாங்க கெஜட்டிலும் தமிழ்நாட்டு வரைப்படத்திலும் **லண்டன் மிஷன்** என்ற பெயர் பதிவுபெற்று **தபால்துறை** முதல் அரசாங்க அலுவலகத்தில் அனைத்திலும் லண்டன் மிஷனரிகளின் ஞாபகார்த்தமாக பதிவு செய்யப்பட்டுள்ளது ஒரு சிறப்பு. இங்கு இந்த கிராம மக்கள் காண்பித்த அன்பு என்னை ஆச்சரியப்பட வைத்தது. மேலும் வேத வசனத்தை படிக்கவும் அறியவும் அதிக ஆர்வம் உள்ளவர்களாக இவர்கள் இருப்பதை உணரமுடிந்தது.

**Rev. K.எபிநேசர் ஜெயக்குமார்** சபை செயலர் சபை அங்கத்தினர் யாவரும் சிறப்பான கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தனர். வட்டார செயலர் **Rev.ஸ்டான்லிகுமார்** அவர்களும் **எல்லிஸ்பேட்டை** சபை ஆலய ஆயர் அவர்களும் மற்ற சபை விசுவாசிகளும் இக்கூட்டங்களில் பங்குகொண்டனர். தேவ நாமம் மகிமைப்பட்டது.

**ஆலோசனைக்கும்- ஜெபத்துக்கும் தொடர்புக்கொள்பவர்கள் கவனிக்கவும்:**

**ஒவ்வொரு மாதத்திலும்** வாரத்தில் **செவ்வாய்கிழமை** முதல் **புதன் மதியம் வரை** மட்டுமே நான் வீட்டில் **சேலத்தில் இருப்பேன்.** ஆலோசனைக்கும்-ஜெபத்துக்கும் நேரில் **சேலம்** (தமிழ்நாட்டுக்கு) வர விரும்புகிறவர்கள், முன்பதாகவே நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் தேதிகளை கடிதத்தில் குறிப்பிட்டு எழுதி கேட்டு எங்களிடமிருந்து பதில் பெற்றப்பின் அல்லது போனில் தொடர்புகொண்டு சந்திக்கும் நாளை உறுதிப்படுத்திக்கொண்டு வரவும்.

தொலைப்பேசியில் ஆலோசனை பெறுகிறவர்கள் வேதவசன சந்தேகம் கேட்கிறவர்கள், ஜெப குறிப்புகளை பகிர்ந்துக்கொள்கிறவர்கள் காலை 8 மணியிலிருந்து இரவு 11மணிவரை தொடர்புக்கொள்ளலாம்.

# வெளிநாடுகளில் என் ஊழியங்கள்:

**குவைத்** நாள் : 2018 ஏப்ரல் 26, 27 மற்றும் 28ம் தேதி வரை மட்டும்
இடம் : St. Johns Tamil Church நாள் : 2018 ஏப்ரல் 26, 27 மற்றும் 28ம் தேதி வரைமட்டும்
தொடர்புக்கு Mr.Selvin MuthuNayagam, CSI Church Secretary, Mob.: +965 99840794

**SWISSERLAND** நாள் : **2018 May, 1, 2 & 3** தொடர்புக்கு: **Mr. RITA,** Mob.: 0763853103

**SWISS (St. Gallen)** நாள் : **2018 May, 4, 5 & 6** தொடர்புக்கு: **Bro. David,** Mob.: 0796481276

**GERMANY(Hermann Albert STR)** நாள் : **2018 May, 10,11,12 & 13**-தொடர்புக்கு: **Mr. Dominic,**Mob.: 0211287991

**ITALY (Roma)** நாள் : **2018 May, 17, 18, & 19** தொடர்புக்கு: **Bro. Aruldas** Mob.: 03299636573

குறிப்பு : மேற்கண்ட நாடுகளில் உள்ள விசுவாசிகள் என்னை நேரில் காணவோ, ஆலோசனை, ஜெபத்துக்கு ஒவ்வொரு நாட்டிலும் கூட்ட ஏற்பாடுகள் செய்யும் அந்தந்த நாட்களில் மேலே குறிப்பிட்டிருக்கும் நபர்களில் கைபேசி எண்களில் தொடர்புக்கொண்டு அவர்கள் குறிப்பிடும் நேரங்களில் என்னை நேரில் சந்தித்து ஜெபிக்கவும், கதைக்கவும் உங்களுக்கு நேரம் ஒதுக்குவார்கள்.

**MARCH 2018**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.